விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 227 வள்ளுவர் ஆண்டு 2057 ஆடி 18 திங்கட்கிழமை (03.08.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# தமிழ் பேசும் கட்சிகள் ஜனாதிபதியுடன் இன்று சந்திப்பு

## தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் ஆராய்வர்

(கொழும்பு)

ஆறு தமிழ் பேசும் அரசியல் கட்சிகள் இன்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளன.

குறித்த சந்திப்பில் தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் ஆராயவுள்ளன.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் விபரீத முடிவெடுத்த இரட்டைச் சகோதரிகள் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழில் விபரீத முடிவெடுத்த இரட்டைச் சகோதரிகள் உயிரிழந்துள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புன்னாலைக் கட்டுவன் பகுதியைச்சேர்ந்த 18 வயதுடைய இரட்டையர்களே இவ்வாறு உயிர்

15ஆம் பக்கம் பார்க்க

## பட்டாசு வெடித்ததில் குருநகரில் குடும்பஸ்தர் பலி

### வெடிக்காத பட்டாசை கையாண்ட போது விபரீதம்

பட்டாசு வெடித்ததில் குருநகரில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் விபத்து இளைஞன் மரணம்



(மன்னார்)

மன்னார் மடு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மடு திருத்தலப் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில்

15ஆம் பக்கம் பார்க்க

# காணிகளை விடுவிக்கக் கோரி வசாவிளானில் போராட்டம்

## இராணுவத்திடம் மகஜரும் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வசாவிளான் மக்களும் நேற்று ஞாயிற்றுக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சைக்கிள் விபத்து இளைஞன் உயிரிழப்பு

### கோண்டாவில் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு

15ஆம் பக்கம் பார்க்க

## மஹர சிறை அமைதியின்மை

### விசாரணை ஆரம்பம் நீதி அமைச்சர்

(கொழும்பு)

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் விசாரணை

16ஆம் பக்கம் பார்க்க

## சீரற்ற வானிலை காரணமாக 5 கடற்றொழிலாளர்கள் மரணம்

### மன்னாரிலிருந்து கடலுக்குச் சென்ற ஒருவரைக் காணவில்லை

(மன்னார்)

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, கடற்றொழிலுக்குச் சென்ற கடற்றொழிலாளர்களில் 5 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் காணாமல் போயுள்ளதாகக் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

மன்னார் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற கடற்றொழிலாளர் ஒருவரே காணாமல் போயுள்ளதுடன் மற்றொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அத்துடன், நீர்கொழும்பு - தொடு

15ஆம் பக்கம் பார்க்க

## ஆவணி மாத இராசி பலன்கள் உள்ளே...

வாசிக்கத் தவறாதீர்கள்.

## வல்வைப் படுகொலையின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல்



15ஆம் பக்கம் பார்க்க

## இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுக்கு தர்க்க ரீதியாகச் சிந்திப்பது அவசியம்

### பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் நீண்டகால இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதற்கு உணர்ச்சிவசப்படாமல் தர்க்கரீதியாகச் சிந்திக்க வேண்டியது அவசியமானது என பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு அவர் நேற்று வழங்கிய விசேட செவ்வியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்

02ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயாளர்கள் 86 ஆயிரமாகப் பதிவு

(கொழும்பு)

வருடத்தின் ஆரம்பம் முதல் இதுவரை நாட்டில் பதிவான ஒட்டுமொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 86,000 ஆகப் பதிவாகியுள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு வெளியிட்டுள்ள புதிய அறிக்கையிலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த ஆண்டில் இதுவரை இல்லாதவாறு அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் கடந்த ஜூலை மாதத்திலேயே பதிவாகியுள்ளதுடன், அந்த எண்ணிக்கை 29,980ஆகப் பதிவாகியுள்ளது.

இதனிடையே, ஓகஸ்ட் மாதத்தில் கடந்துசென்ற இரு நாட்களில் 646 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இவர்களில் அதிகளவிலான நோயாளர்கள் மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை 18,249 ஆகும்.

இரண்டாவதாக அதிகளவிலான நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளதுடன், அந்த எண்ணிக்கை 17,048 ஆகக் குறிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக நோயாளர்கள் பதிவாகிவரும் பின்னணியில், டெங்கு நோய் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 62 ஆகப் பதிவாகியுள்ளதுடன், 137 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் அதிஅபாய வலயங்களாகத் தொடர்ந்து காணப்படுவதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு குறித்த அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)

# சிங்களவர்களின் வரிப்பணத்தில் செம்மணி புதைகுழி அகழ்வா?

## விமல் வீரவன்ஸ இனவாதம்

இலங்கையை குற்றச் செயல்களின் இராச்சியமாக சர்வதேசத்துக்கு- காண்பிப்பதற்காக சிங்களவர்களின் வரிப்பணத்துடன் செம்மணி மனிதப் புதைகுழி அகழப்படுகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பு சிங்களவர்களை கொன்று புதைத்த புதைகுழிகள் பற்றி காணாமல்போனோர் அலுவலகம் ஏன் கவனம் செலுத்தவில்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் தற்போது தீவிரப்படுத்தப்படுகிறது. அதற்கு நீதிகோரி கத்தோலிக்க அருட்தந்தையர்கள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இலங்கை குற்றங்கள் நிறைந்த இராச்சியம். இங்கு யுத்தக்குற்றங்களும் இனவழிப்பும் இடம்பெற்றுள்ளன என்று சர்வதேச அரங்குக்கு காண்பிக்கும் செயற்பாடுகளே தற்போது இடம்பெறுகிறது.

இந்த நாட்டில் வரி செலுத்துவதில் சிங்களவர்கள் பெரும்பான்மையானவர்களாக உள்ளார்கள். சிங்களவர்களின் வரிப்பணத்தைக் கொண்டு காணாமல்போனோர் அலுவலகம்செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளை இந்த அரசாங்கம் வந்ததன் பின்னர் தீவிரப்படுத்தியுள்ளது.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் அரச நிறுவனமாகக் காணப்பட்டாலும் அது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே செயற்படுகிறது. புலிகள் அமைப்பால் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சிங்களப் பொலிஸார், சிங்கள மக்கள் பற்றி காணாமல்போனோர் அலுவலகம் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

இராணுவத்தின் முன்னாள் உயர் அதிகாரிகளை இலக்காகக் கொண்ட செயற்பாடுகளே தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கையில் இனப்படுகொலையும் யுத்தக் குற்றங்களும் இடம்பெற்றதாக சர்வதேசத்துக்கு காண்பிக்கும் போக்கு காணப்படுகிறது என்றார். (ம-7)

## தமிழ்...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ் முற்போக்குக்கூட்டணி ஆகிய 6 தமிழ் பேசும் கட்சிகளும் தமது சுயாதீனத்துவத்தையும் கொள்கைகளையும் அரசியல் நிலைப்பாடுகளையும் பேணிக்கொண்டு, பொது இணக்கப்பாடு எட்டப்படும் விடயங்களில் தமிழ்பேசும் மக்களின் நலனை முன்னிறுத்தி ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்படுவதற்கு உடன்பட்டிருந்தன.

அதன் நீட்சியாக, அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்ததன் பிரகாரம் இன்று (3) காலை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவையும் மாலை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மேற்படி 6 தமிழ்பேசும் கட்சிகளின தும் பிரதிநிதிகள் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 4.00 மணிக்கு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவைச் சந்தித்து, தமது நோக்கம் மற்றும் தாம் விசேட அவதானம் செலுத்தியுள்ள விடயங்கள் பற்றி விரிவாக விளக்கமளிக்கவுள்ளனர். (ம-7)


## இனப் பிரச்...

படுத்தத் தேவையான அனைத்து தீவிர முயற்சிகளையும் தாம் எடுத்திருந்த போதிலும் நாட்டில்நிலவிய முரண்பாடான அரசியல்சூழல் காரணமாகவே அத்திட்டம்வெற்றியடையவில்லை என அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 3ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில், இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வுத் திட்டமொன்றைப் பாராளுமன்றத்தில் தாம் சமர்ப்பித்ததாகக் குறிப்பிட்ட அவர், அனைத்துத் தரப்பினராலும் ஒரு முற்போக்கான திட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஆவணம், அன்றைய இரு பிரதான கட்சிகளுக்கிடையிலான குறுகிய அரசியல் போட்டி காரணமாகக் கைவிடப்பட்டதாகக் கவலை வெளியிட்டார்.

மேலும், பாராளுமன்ற வரலாற்றுச் சரித்திரத்திலேயே முதன்முறையாக, சபையில் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட ஆவணமொன்று பாராளுமன்றத்திற்குள்ளேயே அன்றைய எதிர்க்கட்சியினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட பேரதிர்ச்சி சம்பவமாகவும் அது பதிவானதாக அவர் நினைவுகூர்ந்தார். கடந்தகாலத் தவறுகளைப் பற்றியே தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதை விட, நிகழ்காலத்தில் சாத்தியமான நடைமுறைச் சாத்தியங்களை நோக்கிச் சிந்திப்பதே தற்போதைய சூழலுக்கு யதார்த்தமானது எனக் குறிப்பிட்ட பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், வெறும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமன்றி, நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும் உடனடியாக மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி, அதிகாரப் பகிர்வை வழங்குவதே சிறந்த வழியாகும் என்றும் தெரிவித்தார். (ம-7)


13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சண்முகநாதன் பிரசாத்

தோற்றம் 15.11.1993 மறைவு 27.07.2013

எங்கள் செல்வமே பிரசாத்
இன்றுடன் 13 ஆண்டுகள் நிறைவு பெறலாம்
ஆனால் எங்கள் இதயங்களில் வற்றாத நதி போல்
உன் நினைவுகள் ஊற்றெடுத்த வண்ணம்
ஓடிக்கொண்டே இருக்கிறது
20 ஆண்டுகள் உன்னுடன் இருந்து விளையாடி
சாப்பிட்டு சிரித்து மகிழ்ந்த நாட்கள்
உன்புன்னகை பூத்த முகம் பார்த்திடவும்
உன் குரல் கேட்டிடவும் எங்கள்
இதயம் ஏங்கித் தவிக்கிறதே
இரக்கமே இல்லாமல் எங்களிடம் இருந்து
அந்த ஆண்டவன் தன்னிடம் அழைத்தது ஏன்
உன்னை நிச்சயம் ஒரு நாள் அந்த
ஆண்டவன் தாழ் அடியில் சேர்வோம்
அதுவரை உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கிறோம்.

பெற்றோர், அண்ணன்மார், அண்ணிமார், பெறாமக்கள், சிறிய தாயார் (சோதிமலர்)

(C-6156)



ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

நிறைவேற்று அலுவலர் வெற்றிடம்

மேற்படி ஆலயத்தில் நிறைவேற்று அலுவலராக கடமையாற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.

தகுதிகள்

1. கல்வித் தகைமை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது அலுவலகங்கள், திணைக்களங்கள், நிர்வாக கடமைகளில் ஈடுபட்ட அலுவலர்.
2. சைவசமயத்தவராக இருத்தல் வேண்டும்.
3. 40 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4. மாதாந்த சம்பளம் நேரடியாக பேசி தீர்மானிக்கப்படும்.
5. தங்குமிட, மதிய உணவு ஆலயத்தால் வழங்கப்படும்.
6. உரிய விண்ணப்பங்கள் 15.08.2026 மாலை 5.00 மணிக்கு முன் ஆலய அலுவலகத்தில் உள்ள விண்ணப்பப் பெட்டியில் போடுதல் வேண்டும்.
7. பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
8. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிறைவேற்று அலுவலர் விண்ணப்பம் எனக் குறிப்பிடவும்.

க.ஜீவசீலன்
கௌரவ செயலாளர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(C-6159)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மஹர சிறைச்சாலையின் 20 கைதிகள் பூஸா சிறைச்சாலைக்கு மாற்றம்




(யாழ்ப்பாணம்)

மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளில் 20 பேர் பூஸா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மஹர சிறைச்சாலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏற்பட்ட அமைதியின்மை மற்றும் பதற்ற நிலைமையைத் தொடர்ந்து, பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகவே இக்கைதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# தரம் ஐந்து மணவர்களுக்கான மேலதிக வகுப்புக்களுக்கு தடை

## விதி மீறுவோருக்கு கடும் சட்ட நடவடிக்கை


**(கொழும்பு)**

**2026 ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு நடத்தப்படும் மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளுக்கு எதிர்வரும் 05 ஆம் திகதி நள்ளிரவு முதல் முழுமையான தடை விதிக்கப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.**

பரீட்சை நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையாக நிறைவடையும் வரை இத் தடை அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி வகுப்புகள், பாட நெறி விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

"பரீட்சை வினாக்களுக்குச் சமமான வினாக்கள் வழங்கப்படும்" எனக் கூறி சுவரொட்டிகள், பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள், அச்சு அல்லது இலத்திரனியல்



ஊடகங்கள் வாயிலாக விளம்பரம் செய்வதும், அத்தகைய பொருட்களைத் தம்வசம் வைத்திருப்பதும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இவ் விதி முறைகளை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பரீட்சைகள் திணைக்களம் எச்சரித்துள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டிருக்கும் 2,723 பரீட்சை நிலையங்களில் 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## சாவகச்சேரி வர்த்தக சங்க அலுவலகத்தை சேதப்படுத்தியவருக்கு விளக்கமறியல்


(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் அமைந்துள்ள சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற அலுவலகத்தை அடித்து சேதப்படுத்திய பெண்ணை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மதியம் மேற்படி பெண் குறித்த அலுவலகத்தை அடித்து உடைத்த நிலையில் கைத்தொழில் வணிகர் மன்ற நிர்வாகம் இது தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்திருந்தனர். இந் நிலையிலேயே நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்தேக நபரான பெண் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத் தரவிட்டுள்ளார்.

குறித்த பெண் பிரித்தானிய நாட்டில் இருந்து வருகை தந்திருந்த நிலையிலேயே மேற்படி செயலில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

## வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது



(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் சிகரெட்டுக்களுடன் நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் சீனாவைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் என தெரிவிக்கப்படுகின்றது. கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளின் பெறுமதி 59 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் எனக் குறிப்பிடப்படுகின்றது. (8)

## சட்டவிரோத சிப்பிகளுடன் இரு சந்தேக நபர்கள் கைது



(கொழும்பு)

சட்டவிரோதமாக சிப்பிகளை சேமித்து வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், கற்பிட்டி பகுதியில் உள்ள சந்தேகத்திற்குரிய இரண்டு வீடுகள் சோதனையிடப்பட்டு, வீடுகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்த, பெருந்தொகையான சிப்பி[illegible] ஓடுகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சான்றுப் பொருட்களுடன் சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (8)

## கைத்தொலைபேசியைத் திருடிய இளைஞர் ஒருவர் கைது

(அம்பாறை)

அம்பாறை- நற்பிட்டிமுனை பகுதியில், வீடொன்றில் சார்ஜ் போடப்பட்டிருந்த கைத்தொலைபேசியைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட பெண் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டில், தனது வீட்டில் கைத்தொலைபேசியை சார்ஜ் போட்டு விட்டு தேவை நிமித்தம் வெளியே சென்று திரும்பிய போது, ஜன்னல் கண்ணாடி உடைக்கப்பட்டு தொலைபேசி களவாடப்பட்டு இருந்ததாகத் தெரிவித்திருந்தார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் உடனடியாக செயற்பட்ட பொலிஸார், குறித்த வீட்டின் எதிர் வீட்டில் தங்கியிருந்த 21 வயதுடைய இளைஞனைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

சந்தேகநபர் திருடப்பட்ட கைத்தொலைபேசியைத் தனது உறவினர் ஒருவரின் வீட்டில் மறைத்து வைத்திருந்த நிலையில், அதனை பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

அத்துடன், சந்தேக நபரிடமிருந்து ஒரு தொகை ஐஸ் போதைப் பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். ஆரம்பக்கட்ட விசாரணைகளில், கைதான நபர் போதைப்பொருளுக்கு தீவிரமாக அடிமையானவர் என்பதுடன் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் மட்டும் இவர் மீது 7 குற்றச்சாட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (8)



## கொக்குளப்பதி கருமாரி அம்மன் சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி கொக்குளப்பதி மூன்று முடி கருமாரி அம்மன் திருக்கோவிலின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து நடைபெறும் இத்திருவிழாவில் 13 ஆம் திகதி இரதோற்சவமும் 14 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

இம் மஹோற்சவத் திருவிழாவின் முக்கிய அம்சமாக, திருக்கோவிலில் புதிதாக அமைக்கப்பட்ட நூதன திரா விட மரபு எண்கோண வடிவிலான "புதிய சித்திரத்தேர்" வெள்ளோட்ட திருவிழா எதிர் வரும் 10ஆம் திகதி நடை பெறவுள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விளையாட்டுச் செய்திகள்

## இலங்கையுடனான டெஸ்ட் போட்டி
# இந்திய அணி அறிவிப்பு

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட இருக்கிறது. முதல் போட்டி வருகிற 15 ஆம் திகதி தொடங்குகிறது. இந்த போட்டி காலி மைதானத்தில் நடக்கிறது. அதன்பின் 23 ஆம் திகதி 2 ஆவது டெஸ்ட் கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் தொடங்குகிறது.

இதற்கிடையே இந்திய அணி வருகிற 7 ஆம் திகதி இலங்கை லெவன் அணிக்கு எதிராக பயிற்சி ஆட்டத்தில் விளையாட இருக்கிறது.

சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணியில் சரான்ஷ் ஜெயின் என்ற புதிய வீரர் இடம் பிடித்துள்ளார்.

33 வயதான இவர் இடது கை துடுப்பாட்ட வீரர். வலது கை சுழற் பந்து வீச்சாளர் ஆவார். மேலும், மானவ் சுதர் என்ற இடது கை சுழற்பந்து வீச்சாளரும் இடம் பிடித்துள்ளார்.

இந்திய அணியில் சுப்மன் கில் (கப்டன்), கே.எல். ராகுல் (துணைக் கப்டன்), ஜெய்ஸ்வால், துருவ் ஜுரெல், தேவ்தத் படிக்கல், ரிஷப் பண்ட், சாய் சுதர்சன், ஜடேஜா, சரான்ஷ் ஜெயின், மானவ் சுதர், பும்ரா, குர்னூர் பிரார், குல்தீப் யாதவ், முகமது சிராஜ், பிரசித் கிருஷ்ணா ஆகியோர் இடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)



## ரி-10 கிரிக்கெட் தொடர்-2026
# யாழ்.ஜொனியன்ஸ் அணி வெற்றி



யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடாத்தி வரும் ரி-10 தொடரில் யாழ்.ஜொனியன்ஸ் அணியும் டிறைற்றோன் அணியும் 18 ஆம் திகதி சனிக்கிழமை நடந்த போட்டியில் யாழ்.ஜொனியன்ஸ் அணி டிறைற்றோன் அணியை 3 ஓட்டங்களால் வென்று தமது முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.ஜொனியன்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை மேற் கொண்டது. யாழ்.ஜொனியன்ஸ் அணி 10 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 101 ஓட்டங்களை பெற்றது.

சன்சயன்-10, அஸ்நாத் ஆட்டமிழக்காது-58, தேவபிரசாந்-19 ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் டிறைற்றோன் அணியின் உதயசாந் 2 ஓவர்களின் 7 ஓட்டங்களை கொடுத்து 1 இலக்கினையும் மணிவண்ணன் 2 ஓவர்களில் 23 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டிறைற்றோன் அணி 10 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களை பெற்றுள்ளனர். மணிவண்ணன்-39, பிரியந்தன் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களினை பெற்றுள்ளனர். பந்து வீச்சில் யாழ்.ஜொனியன்ஸ் அணியின் கமல்ராஜ் 2 ஓவர்களில் 25 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் கிஷாஸ்துலன் 2 ஓவர்களில் 16 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்கினையும், சனுசன் 2 ஓவர்களில் 13 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். ஜொனியன்ஸ் அணி தமது முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது. (க-8)

# சிற்றி ஓபின் டென்னிஸ்
## பிரிட்ஸ்-ஜோடார் இறுதியில்



சிற்றி ஓபின் டென்னிஸ் போட்டி அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் நடைபெற்று வருகிறது. இதில் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்று விளையாடி வருகின்றனர்.

இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி சுற்றில் அமெரிக்காவின் டெய்லர் பிரிட்ஸ், சக நாட்டு வீரரான பிராண்டன் நகஷிமா உடன் மோதினார்.

இதில் சிறப்பாக ஆடிய டெய்லர் பிரிட்ஸ் 6-3, 3-6, 6-3 என்ற செட் கணக்கில் வென்று இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

இதேபோல் நடைபெற்ற மற்றொரு அரையிறுதியில் சிலியின் அலெக்சாண்டடபிலோ, ஸ்பெயினின் ரபேல் ஜோடார் உடன் மோதினார்.

இதில் சிறப்பாக ஆடிய சிலி வீரர் முதல் செட்டை 7-6 (8-6) என வென்றார். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அதிரடியாக ஆடிய ரபேல் ஜோடார் 6-4 என 2 ஆவது செட்டைக் கைப்பற்றினார்.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3 ஆவது செட்டில் ரபேல் ஜோடார் 6-4 என வென்று இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். (க-8)

## சென்னை சூப்பர் கிங்ஸின்
# ஹர்திக் பாண்டியா



மும்பை இந்தியன்ஸ் கப்டன் ஹார்திக் பாண்டியாவை சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இணைக்க அதன் நிர்வாகம் முயல்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மும்பை இந்தியன்ஸ் அணி 2024 இல் 10 ஆவது இடத்தை பிடித்தது. 2025 இல் பிளேஆஃப் வரை சென்றது. 2026 சீசனில் மிகவும் மோசமான நிலையை எட்டியது.

இதனால் ஹர்திக் பாண்டியா மும்பை இந்தியன்ஸ் அணியில் இருந்து வெளியேற முயன்றார். அதேவேளையில் மும்பை இந்தியன்ஸ் அணியும் அவரை விடுவிடுக்க முடிவு செய்தது.

ஹர்திக் பாண்டியாவை வாங்க பெரும்பாலான அணிகள் ஆர்வம் காட்டி வருகின்றன. தற்போது இதில் சென்னை சூப்பர் கிங்ஸ் மும்பை இந்தியன்ஸ் அணியிடம் பேசி வருவதாக தகவல் வெளியானது.

இந்நிலையில், வீரர்களின் தொகை தொடர்பாக தற்போது வரை எந்த அணியுடனும் பேச்சுவார்த்தையில் மும்பை அணி ஈடுபட வில்லை.

அணியின் செயல் திறன் ஆய்வு தற்போது நடைபெற்று வருகிறது. இது முழுமையாக நிறைவடைந்த பின்னரே, அணியின் மற்ற முடிவுகளை மும்பை அணி எடுக்கவுள்ளது என தகவல் வெளியாகியுள்ளன. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மஹர சிறைச்சாலை அமைதியின்மை விசாரணைகள் ஆரம்பிக்கப்படும்

## ஊடகப் பேச்சாளர் கஜநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட பதற்ற நிலைமை தொடர்பில் உடன டியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என சிறைச்சாலைகள் திணைக்கள த்தின் ஊடகப் பேச்சாளர் ஏ.சி. கஜநா யக்க தெரிவித்துள்ளார். நேற்று ஞாயிற் றுக்கிழமை ஊட கங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இக்கலவரத்தின் போது சிறைக் கைதிகளால் மஹர சிறை ச்சாலையின் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங் கள் குறித்தும் அவர் இதன்போது தெளிவுபடுத்தினார்.

அதன்படி, சிறைச் சாலையின் சமையலறை, புனர் வாழ்வுக் கட்டிடம், புனர்வாழ்வு அலுவ லகம்,தலைமைச் சிறைக் காவலர் அலுவலகம் மற்றும் சிறைச் சாலை வைத்தியசாலை போன்ற பகுதிகள் பாரியளவில் சேத மடைந்துள்ளன.

இதேவேளை, குறித்த அமைதி யின்மைக்கான கார ணம் இதுவரை கண் றியப்பட வில்லை என்றும், அது தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக் கப்படும் என்றும் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (8)

# ஊர் மக்களைத் துரத்திய காட்டு யானை



அம்பாறை- பசறிச்சேனை கிராமத்திற்குள் நேற்றிரவு புகுந்த காட்டு யானை ஒன்று, அதை விரட்ட முயன்ற கிராம மக்களைத் திரும்பத் துரத்தியதால் அந்தப் பகுதியில் பெரும் அச்சம் நிலவியது.

கிராமத்திற்குள் புகுந்து முழுமை யாகச் சுற்றித் திரிந்த காட்டு யானையை ஊரார் ஒன்று திரண்டு வெளியேற்ற முய ன்றபோது, யானை கோப மடைந்து துர த்த முற்பட்டதால் பொதுமக்கள் நாலா பக்கமும் தெறித்து ஓடினர். எனினும், அதி ஷ்டவசமாக பெரிய அளவிலான உயிர்ச்சேதங்க ளையோ உடை மைச் சேதங்க ளையோ ஏற்ப டுத்தாமல் யானை மீண்டும் காட்டுப் பகுதிக்குள் சென் றுள்ளது. (8)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-14, நாவலர் வீதி, 147/1, 147/2 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனம் உரிமையாளர் செல்லப்பா தட்சணாமூர்த்தி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை, இல.147, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாத்தையா வெள்ளைச்சாமி கைம்பெண் பவளம், இவ்வாதனம் தமது நீண்ட நெடுங்கால, இடையறாத எவருக்கும் மாறான ஆட்சியானது என குறிப்பிட்டு 01.09.2003 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திரு. யோ.சத்தியநாதன் முகதாவில் 551A ஆம் இலக்கத்தில் சீதன உறுதி மூலம் அதே ஊரைச்சேர்ந்த தனது மகளான க.இரத்தினகுமார் பெண் மங்களேஸ்வரிக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை பறையன்காடு நிலப்பரப்பு ஏழு குளி பதினாறின் மேல் பதின்மூன்று (நி.ப 7 கு 13/16) இதில் நிந்தமாக ஆட்சி செய்யப்பட்ட 1985.06.13 இல் உத்தரவு பெற்ற நில அளவையாளர் J.A.அன்றூவினால் 191ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் 1,2,3,4 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு இரண்டு குளி பதினைந்து தசம் ஐந்து ஐந்து. இதில் சொரியலாக எனக்குள்ள முப்பத்தியிரண்டில் இருபத்திநான்கிற்கு (24/32) பதிலாக நிந்தமாக குறித்த படத்தில் துண்டு ஒன்று(து.1) ஆகிய குளி பதினாறு தசம் ஏழு எட்டு (கு 16.78)ஆம் வீடும், இதில் தெற்குப் பக்கமாக குளி மூன்றும் வீட்டின் பகுதியும் நீக்கி மிகுதி குளி பதின்மூன்று தசம் ஏழு எட்டு (குளி 13.78). இதற்கு எல்லைகள்:

**கிழக்கு:** பத்து அடி (10") அகலப் பொது ஒழுங்கை,
**வடக்கு:** வெள்ளைச்சாமி மகள் பிறேமாவதியின் ஆதனம்,
**மேற்கு:** ஆறுமுகம் நல்லதம்பியின் ஆதனம்,
**தெற்கு:** மிகுதி ஆதனம்,

இன்னும் குறித்த படத்தில் துண்டு இரண்டில் (து.2) உள்ள அரைவாசிக் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப்பங்கும் தண்ணீர்ப்பங்கைப் பெறுவதற்காக குறித்த படத்தில் துண்டு நான்கின் (து.A) ஊடாக துண்டு இரண்டின் வடக்கு அருகாகப் போயும் வந்தும் தண்ணீர்ப்பங்கைப் பாவிக்கும் உரித்தும், மேலும் குறித்த துண்டு நான்கின்(து.4) ஊடாக தெற்கே உள்ள நாவலர் வீதியைப் பாவிக்கும் பாதை உரித்தும்.

தற்போது க.இரத்தினகுமார் பெண் மங்களேஸ்வரி இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது க.இரத்தினகுமார் பெண் மங்களேஸ்வரி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன் .

**மாநகர முதல்வர்,**
**யாழ் மாநகர சபை.**

(C-6150)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 15 - 08 - 1956

மறைவு 29 - 07 - 2026

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி.ஜெயந்தசிறீ கஜந்தன்

அவர்களின் அன்பு மாமியார்

**அமரர்.சிறிகாந்தகுமாரி பரமலிங்கம்**

அவர்கள் 2026.07.29 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில்

பிரிவுத் துயரில் பங்கு கொள்ளும்: **ஆசிரியர் நலன்புரிக்கழகம். யா/இணுவில் இந்துக் கல்லூரி**

(2551)

# விவேகானந்த சபை, கொழும்பு

## அகில இலங்கை சைவ சமயப் பாடப் பரீட்சை

பரீட்சை திகதி : 01.11.2026 (ஞாயிறு)
விண்ணப்ப முடிவுத் திகதி : 14.09.2026 (திங்கள்)

**பரீட்சைக் கட்டணம்**

| தரம் | |
|---|---|
| 3 | ரூ.50/= |
| 4 | ரூ.100/= |
| இதர தரங்கள் | ரூ.150/= |

Scan Google Form QR Code

பரீட்சை விண்ணப்ப படிவங்கள் பாடசாலைகளுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. புதிதாக விண்ணப்பிக்கும் பாடசாலைகள் சபைக்கு WhatsApp மூலம் தொடர்பு கொள்ளவும்.

- Google Form நிரப்பப்பட வேண்டும் (கணினி ஆசிரியர் உதவியைப் பெறவும்)
- Google Form Link & QR Code ஆகியவற்றை சபை WhatsAppக்கு செய்தி அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.
- 2025 பரீட்சை முடிவுகள் ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டது.
- 2025 மாணவர் சான்றிதழ்களும், மேற்பார்வையாளர் சான்றிதழ்களும் ஒக்டோபர் 2026 முன்பு அனுப்பி வைக்கப்படும்.
- 2026 ஆம் ஆண்டுக்கான மொத்தப் பரிசுத் தொகை: ரூ 20 லட்சம்.

(2552)

**34, விவேகானந்த மேடு,கொழும்பு - 13.**
TP:**0112422646,**
WhatsApp **0777266461**

**திருமதி.ரா. தாட்சாயினி**
[illegible]
**கௌரவ பொதுச் செயலாளர்**

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு பிரதேசசபை: மயிலிட்டி உப அலுவலகம்**

**உரிமையாளர் பெயர் : குமரகுரு கைம்பெண் செனஸ்ற்றா**
**விண்ணப்பதாரர் பெயர் : குமரகுரு கைம்பெண் செனஸ்ற்றா**
**முகவரி : வசாவிளான்**

இவ்வாதனம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 15 இல் தெல்லிப்பளை வல்லை வீதியில் இவ்வாதனம் அமைந்துள்ளது குறித்த ஆதனம் பிரசித்தநொத்தரிஸ் விநாயகமூர்த்தி இளங்குமார் முகதாவில் உறுதி இலக்கம் 1879 ஆம் இலக்கத்தில் 29.05.2024 அன்று நிறைவேறிய நன்கொடை உறுதியின் பிரகாரம் குறித்த குமரகுரு கைம்பெண் செனஸ்ற்றாவுக்கு சொந்தமும் உரிமையுமாய் இருந்து வந்தது.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியில் உள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளைவையாளர் V.தவராஜா அவர்களின் வரைபட இலக்கம் 9588 (2026.07.11) இன் படி துண்டு 1 ஆகும்.

**ஆதனவிபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம்,வலிகாமம் வடக்கு பிரதேச சபை, வலி வடக்கு பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு J/ 244 **"பழங்காடு"** நிலப்பரப்பு 01 இதற்கு எல்லைகள்

**வடக்கு** - நாகர் சிங்கராசாவின் ஆதனமும், 10 அடி அகலங்கொண்ட ஒழுங்கையும், விக்ரர் டொறினினது ஆதனமும்
**கிழக்கு** - பொஸ்கோ அல்வின் புஸ்பவதியின் ஆதனம்
**மேற்கு** - யோசப் யோகேஸ்வரியின் ஆதனம்
**தெற்கு** - ஒழுங்கை

மேற்குறித்த ஆதனத்தை குமரகுரு கைம்பெண் செனஸ்ற்றா என்னும் பெயரில் ஆதனப் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோ.சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(8190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாவில்பதி ஐயப்ப சுவாமிக்கு இன்று கொடியேற்றம்



(காரைநகர்)

காரைநகர் வியாவில் பதி ஆதிஷேத்திரம் திருவருள் மிகு பூரணா புஷ்கலா சமேத ஹரி ஹரபுத்ர ஐயப்ப சுவாமி ஆலய திவ்ய மகோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவங்களில் எதிர் வரும் 10 ஆம் திகதி இரவு 8 மணிக்கு வசந்த மண்டப் பூஜையைத் தொடர்ந்து சப்பறத் திருவிழாவும் 11 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் 12 ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் நடைபெறும் என ஆலய அறங்காவலர் தெரிவித்துள்ளார். (8)

# Dear Children, Sincerely நாடக ஆற்றுகை யாழ்ப்பாணத்தில்



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் முன்னணி நாடகக் குழுவான ஸ்டேஜஸ் நாடகக் குழுவின் "Dear Children, Sincerely" எனும் இலங்கையின் ஏழு தசாப்தங்களைக் காட்சிப்படுத்தலாகக் கொண்ட நாடக ஆற்றுகை எதிர்வரும் ஓகஸ்ட் 9 மற்றும் 10 ஆம் திகதி மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்றம் கலைத்தூது கலையரங்கில் நடைபெறவுள்ளது.

1930களில் பிறந்த தலைமுறையினரின் மனப்பதிவுகளை மையமாகக்கொண்ட இந் நாடக ஆற்றுகை ஜேர்மனியில் நடைபெற்ற Theater der welt-2026 விழாவில் ஆற்றுகை செய்யப்பட்ட நாடகம் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# பண்பாட்டுப்பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில் யாழ்ப்பாணப் பண்பாட்டுப் பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து நடாத்தும் "பண்பாட்டுப் பெருவிழா" நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பண்பாட்டுப் பேரவைத் தலைவர் திருமதி சிவகாமி உமாகாந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் ம. பிரதீபன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8)

# ஆமையுடன் ஒருவர் கைது!

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆமைகளை சட்டவிரோதமாக வைத்திருந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதன்போது அவரிடமிருந்து ஆறு கடலாமைகள் மீட்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது. (8)

# சமுர்த்தி பயனாளிகளுக்கு வீடு கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி வீட்டுத்திட்ட பயனாளி ஒருவருக்கு வீடு கையளிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி கலந்து கொண்டு வீட்டை பயனாளியிடம் கையளித்துள்ளார். (8-60)



முல்லைத்தீவு - முள்ளியவளை, நாவல்காடு சந்திரன் முன்பள்ளி மற்றும் சஞ்சீவன் குடியிருப்பு கேதீஸ் முன்பள்ளிச் சிறார்களின் 2026ஆம் ஆண்டிற்கான மகிழ்களவிழா நாவல்காடு ஐங்கரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | -- | 200 |
| பச்சைமிளகாய் | 1200 | 1100 | 1000 | 1200 |
| தக்காளி | 420 | 450 | 450 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 200 | 200 |
| கோவா | 180 | 300 | 200 | 300 |
| கரட் | 400 | 400 | 350 | 450 |
| பூசணி | 100 | 200 | 180 | 200 |
| புடோல் | 150 | 200 | 150 | 200 |
| வாழைக்காய் | 120 | 140 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 350 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 230 | -- | 240 |
| பாகற்காய் | 600 | 500 | 400 | 400 |
| வெண்டக்காய் | 200 | 200 | 180 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 400 | 350 | 400 |
| பயற்றங்காய் | 100 | 140 | 150 | 150 |
| லீக்ஸ் | 250 | 380 | 300 | 300 |
| பீற்றூட் | 350 | 400 | 350 | 400 |
| கறிமிளகாய் | 400 | 500 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 120 | 400 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 600 |
| தம்புள்ள-கத்தரி | 200 | 200 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 60 | 100 |
| தேசிக்காய் | 350 | 200 | 250 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 140 | 160 | 100-150 |
| இராசவள்ளி | 300 | 450 | 350 | 300 |
| வெங்காயப்பூ | 300 | 250 | -- | 300 |
| முள்ளங்கி | 120 | 160 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | -- | 60 |
| வல்லாரை | 80 | 70 | -- | 100 |
| ஈரப்பலா | 150 | 200 | -- | 150 |

# வடமாகாணத்தில் 7600 கட்டாக்காலி நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் வீதியோரங்களில் பெருகிவரும் கட்டாக்காலி நாய்களால் ஏற்படும் விபத்துகள் மற்றும் பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட விசேட கருத்தடைச் செயற்றிட்டத்தில் இந்த ஆண்டு 7,606 நாய்களுக்குக் கருத்தடை சிகிச்சை செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழான கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும், உள்ளூராட்சி அமைச்சின் கீழான உள்ளூராட்சித் திணைக்களமும் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக இந்த ஆண்டு 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், மாவட்ட ரீதியாக நாய்களுக்குக் கருத்தடை செய்யப்படவுள்ளது.

இச்செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக, வவுனியா மாவட்டத்தில் இதுவரை 72 நாய்களுக்கான கருத்தடை சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து, ஏனைய மாவட்டங்களிலும் இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக, இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாண மாநகர சபையிலும், நாளை செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையிலும், எதிர்வரும் 23ஆம் திகதி வவுனியா மாநகர சபையிலும் இத்திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 2030 இல் நாட்டின் ஏற்றுமதி வருமானம் உயரும்

## அமைச்சர் வசந்த சமரசிங்க நம்பிக்கை

**(கொழும்பு) ______________________**
**2030 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானத்தை 36 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமாக உயர்த்துவது அரசாங்கத்தின் இலக்காகும் என அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**



வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களில் பணியாற்றும் வர்த்தகத் திணைக்களத்தின் வர்த்தக அதிகாரிகளுடன் நடைபெற்ற சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு ஆதரவாக, இலங்கையின் வர்த்தகம், முதலீடு, சுற்றுலா மற்றும் திறன்வாய்ந்த வேலை வாய்ப்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கான தற்போதைய நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால முன்னுரிமைகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டுள்ளன.

அத்துடன், வணிக முக்கியத்துவம் வாய்ந்த 23 சர்வதேச சந்தைகளில் பணியாற்றும் அதிகாரிகளின் பங்கு, இலங்கையின் வர்த்தக மற்றும் பொருளாதார நலன்களை முன்னெடுப்பதில் மிகவும் முக்கியமானது என அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (8)

# காற்றுடன் கூடிய மழை

## பேருந்தின் மீது முறிந்து விழுந்தது மரம்

(கொழும்பு)

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் டெவோன் நீர்வீழ்ச்சிக்கு அருகில் நேற்று காலை பாரிய மரம் ஒன்று முறிந்து பேருந்து மீது விழுந்த சம்பவத்தால் சில மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டது.

தொடர்ச்சியாக பெய்து வரும் மழை மற்றும் கடும் காற்று காரணமாக வீதியோரத்தில் இருந்த பாரிய மரம் திடீரென முறிந்து, அவ்வழியாக பயணித்துக் கொண்டிருந்த பேருந்து மீது விழுந்துள்ளது.

பின்னர், பிரதேச மக்கள் துரிதமாக நடவடிக்கை எடுத்து மரக்கிளைகளை அகற்றியதைத் தொடர்ந்து ஒரு வழிப் போக்குவரத்து ஏற்படுத்தப்பட்டது.

சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. எனினும், மரம் விழுந்ததில் குறித்த பேருந்திற்கு சிறிய அளவில் சேதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (8)


31 ஆம் நாள் நினைவஞ்சலி



உரும்பிராய் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த முன்னாள் விளையாட்டுத்துறை ஆசிரியர் அமரர்.**சண்முகம்பிள்ளை இரட்ணம்** அவர்களின் அன்பு மனைவியும், பழைய மாணவர் சங்க ஆயுட்கால உறுப்பினருமான திருமதி **ராதை பாஸ்கரன்** அவர்களின் அன்புத் தாயாருமான

அமரர்
**இரட்ணம் இராசலட்சுமி**

மலர்வு - 02.11.1936
உதிர்வு - 04.07.2026


அம்மையார் அமரத்துவம் அடைந்த செய்தி எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி உள்ளது.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-6157)

**உரும்பிராய் இந்துக் கல்லூரி, பழைய மாணவர் சங்கம், உரும்பிராய், கனடா, லண்டன்.**


# வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்




(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்படவுள்ள தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய முன்பகுதியின் இரண்டாவது வீதி புனரமைப்புக்கான பெயர்ப் பலகை திரை நீக்கல் நிகழ்வு அண்மையில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் நடராசா திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபை அமைச்சின் பிரதி அமைச்சர் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பெயர் பலகையை திரை நீக்கம் செய்து வைத்தார். (8-60)




பருத்தித்துறை கெருடாவில் தெற்கு அம்பிகை முன் பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. (படம்:மகாலிங்கம்)

**காரைநகர் வியாவில்பதி ஆதிஷேத்திரம்**
**திருவருள்மிகு பூரணா புஷ்கலா சமேத ஹரிஹரபுத்ர**
**ஐயப்ப சுவாமி தேவஸ்தானத்தின்**
**மகோற்சவம் 03.08.2026 இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பம்**

**கிரியாகால நிகழ்வுகள்**

- ஆடி 18ஆம் நாள் 03.08.2026 **திங்கட்கிழமை** காலை 7.00 மணிக்கு அபிஷேகம், 9.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை, 10.30 மணிக்கு கொடியேற்றம், நவசாந்தி ஆவாகனம்,மாலை 4.30 மணிக்கு மஹா சாஸ்தா யாகாரம்பம்
- ஆடி 25ஆம் நாள் 10.08.2026 **திங்கட்கிழமை** மாலை 5.00 மணிக்கு வேட்டைத்திருவிழா, இரவு 8.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை, கோபுர உற்சவம் (சப்பறத் திருவிழா)
- ஆடி 26ஆம் நாள் 11.08.2026 **செவ்வாய்க்கிழமை** காலை 7.00 மணிக்கு அபிஷேகம், விஷேட பூஜை, 9.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை, 10.30 மணிக்கு **இரதோற்சவம்**, 12.00 மணிக்குப் பச்சைசாத்தி சிரத அவரோகணம் பிராயசித்த அபிஷேகம்.
- ஆடி 27ஆம் நாள் 12.08.2026 **புதன்கிழமை -ஆடி அமாவாசை விரதம்**, காலை 6.00 மணிக்கு அபிஷேகம்,விசேட பூஜை, தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜை, **தீர்தோற்சவம்**, மஹாயாக கும்ப அபிஷேகம்,பூஜை, மாலை கொடியிறக்கம் சந்தி விசர்சனம், மௌன உற்சவம், ஆச்சாரிய உற்சவம், அருளுரை.
- ஆடி 28ஆம் நாள் 13.08.2026 **வியாழக்கிழமை-** மாலை 5.00 மணிக்கு அபிஷேகம், 7.00 மணிக்கு ஊஞ்சல் உள்வீதி உற்சவம்,திருக்கல்யாணம் வெளிவீதி உற்சவம்.
- ஆடி 29ஆம் நாள் 14.08.2026 **வெள்ளிக்கிழமை** காலை 10.00 மணிக்கு பிராயசித்த அபிஷேகம், மாலை 5.00 மணிக்கு வைரவர் பொங்கல் பூஜை வழிபாடு.

**மஹோற்சவ தேவஸ்தான பிரதமகுரு**
**சிவாகம ரத்னகர சிவாகம வாஸஸ்பதி, சிவஸ்ரீ.க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்**
(பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்)



ஆதி ஐயனார் ஆலயத்தில் சோழர் காலக் கட்டடக்கலை மரபில் அக்காலத்தில் அமைந்திருந்த ஏழுநிலைக் கோபுரம் போன்று அடியார்களின் பங்களிப்புடன் புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றமையைத் தொடர்ந்து அடியார்களின் ஆதரவும் பங்களிப்பும் பெருக ஆலயத்தின் அறப்பணிகள் தொடர திருவருளை வேண்டுகிறோம்.
வியாவில் ஐயனார் கோயில்,
வர்த்த வங்கி கணக்கு இலக்கம்: 1060015904

**திருவிழா நாட்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.**


(C-6151)

**ஆலய அறங்காவலர் -077 625 8239**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பாரதம்

### ரஷ்ய உணவகத்தில் குண்டுவெடிப்பு
# மூவர் உயிரிழப்பு



(மொஸ்கோ)
ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள பிரபல உணவகம் ஒன்றில் வெடிபொருள் வெடித்ததில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதோடு 21 பேர் காயமடைந்துள்ளதாக ரஷ்ய அரசு தெரிவித்துள்ளது.

நகரின் மையப்பகுதிக்கு அருகில் உள்ள குட்ரின்ஸ்காயா சதுக்கத்தில் உள்ள இத்தாலிய உணவகத்தில் இந்த வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.


வெடி பொருட்களை ஏந்தி வந்த பெண் ஒருவர் உணவகத்திற்குள் நுழைய முயன்றதாகவும், அவரைப் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் தடுத்து நிறுத்தியதாகவும் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் சமயத்தில் வெடிபொருள் வெடித்ததில், குறித்த பெண், பாதுகாப்பு ஊழியர் மற்றும் உணவகத்திற்கு வந்த வாடிக்கையாளர் ஒருவர் என மூன்று பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நடந்த போது நிகழ்வு ஒன்று நடந்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் இலக்கு வைக்கப்பட்டவர் யார் என்பது குறித்தோ அல்லது நிகழ்வில் பங்கேற்ற விருந்தினர்களின் விவரங்கள் குறித்தோ அதிகாரிகளால் எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# உலக நன்மைக்காக பே
# மீறினால் ஈரான் சுக்
## அமெரிக்க




(
உ
விற்
ஆயி
ஈரா
ஜனா

ஈரான் மீது நடத்த திட்டமிட்டிருந்த பெரிய அளவிலான இராணுவத் தாக்குதலை அமெரிக்கா தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஈரான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமது சமூக வலைதளத்தில் இது குறித்து பதிவிட்டுள்ள ட்ரம்ப், ஒரு ஒப்பந்தத்திற்கான அடிப்படை வரைமுறைகள் எட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச கப்பல் போக்குவரத்திற்கு மிக முக்கியமான ஹார்முஸ் நீரிணையை ஈரான் உடனடியாகவும் முழுமையாகவும் திறக்க வேண்டும் என்றும், ஈரானின் அணுசக்தி திட்டங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் முற்றிலும் நிறுத்தப்பட வேண்டும் என்றும், இந்த அமைதி முயற்சிக்கு இஸ்ரேலும் ஒப்புதல் அளித்துள்ளதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் ரத்து செய்யப்பட்டாலும், ஈரான் மிக விரைவாக இந்த ஒப்பந்தத்தை இறுதி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையையும் ட்ரம்ப் விதித்துள்ளார். "உலகின் நன்மைக்காகவும், ஈரானின் எதிர்கால வாழ்விற்காகவும் இந்த தாக்குதலை நிறுத்தி வைக்க ஒப்புக்கொண்டுள்ளேன்.

ஆன
வின
டும்.
அ
டாம்
பெரி
தயா
மை
அ
ரப்பு
சவுதி
ட்ரம்
கொ
பதற்

# இரட்டையர்களால் நடத்தப்பட்ட இரட்டையர் திருமணம்
## காலம் கடந்தும் வைரல்



(டில்லி)
2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், இந்தியாவின் கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டம், புள்ளூரில் அமைந்துள்ள செயிண்ட் சேவியர் தேவாலயத்தில் உலக கவனத்தை ஈர்த்த வித்தியாசமான திருமண விழா ஒன்று நடைபெற்றது. அந்தப் புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.

ஒரே மாதிரியான இரட்டைச் சகோதரர்களான ஒரே மாதிரியான இரட்டைச் சகோதரிகளை திருமணம் செய்து கொண்டனர்.

இந்த திருமணத்தின் தனிச்சிறப்பு மணமக்கள் மட்டுமல்ல. திருமணச் சடங்கை நடத்தி வைத்தவர்களும் இரட்டையர்களான கத்தோலிக்க பாதிரியார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


அதுமட்டுமன்றி, மலர் தூவும் சிறுமிகள் மற்றும் மணமகனுடன் சென்ற சிறுவர்கள் உள்ளிட்ட திருமண விழாவின் முக்கிய பங்கேற்பாளர்களும் இரட்டையர்களாகவே இருந்தனர்.

இதன் மூலம், திருமணத்தின் பெரும்பாலான முக்கிய பொறுப்புகள் அனைத்தும் இரட்டையர்களால் இடம்பெற்ற அபூர்வ நிகழ்வாக இந்த திருமண விழா அமைந்தது.

இந்த திருமணத்தின் புகைப்படங்கள் அப்போது சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவி, உலகின் பல்வேறு நாடுகளிலும் பெரும் வரவேற்பைப் பெற்றன.

பல ஆண்டுகள் கடந்த பின்னரும், உலகை வியப்பில் ஆழ்த்திய அரிய உண்மைச் சம்பவங்களில் ஒன்றாக இந்த திருமணம் இன்றளவும் நினைவுகூரப்பட்டு வருகிறது. (க-8)

# நாஸ்கா கோடுக
# பறந்த விமான
## 13 பேர் பரித



பெருவில் உலகப் புகழ்பெற்ற தொல்லியல் பாரம்பரியப் பகுதியான நாஸ்கா கோடுகளுக்கு மேலே பறந்து கொண்டிருந்த சுற்றுலா விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த 13 பேரும் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

என
யில்
வெ
இ
பிஸ்
ருந்
கொ
தெர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வெளிநாடு



# . போர் நிறுத்தப்படுகிறது
# ..க்கு நூறாக்கப்படும்
## ..க்க ஜனாதிபதி எச்சரிக்கை

(வோஷிங்டன்)

**உலகின் நன்மைக்காகவும் ஈரானின் எதிர்கால வாழ்விற்காகவும் ஈரான் மீதான போர் நிறுத்தப்படுகிறது. ஆயினும் எமது கோரிக்கைகளை ஏற்காவிடின் ஈரானை சுக்குநூறாக்குவோம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.**

ம் நிறு . இந்த ரேலும் ட்ரம்ப்

ப்பட்டா க இந்த செய்ய தனை ர்ளார். கவும், விற்காக நிறுத்தி ளேன்.

ஆனால், இந்த ஒப்பந்தம் மிக விரைவாக எட்டப்பட வேண்டும்.

அமெரிக்கப் படைகள் இரண்டாம் உலகப்போருக்குப் பின் மிகப் பெரிய அளவில் தாக்குதலுக்கு தயாராக இருக்கின்றன" என கடுமையாக எச்சரித்துள்ளார்.


அமெரிக்கா தாக்குதலைத் தீவிரப்படுத்த ஆயத்தமான நிலையில், சவுதி இளவரசர் முஹம்மது பின், ட்ரம்பை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்தி பதற்றத்தைத் தணிக்குமாறு கோரிக்கை விடுத்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமீபகாலமாக அமெரிக்கா-இஸ்ரேல் கூட்டணிக்கும் ஈரானுக்கும் இடையே போர் பதற்றம் உச்சத்தை எட்டியிருந்தது. ஈரான் மீது புதிய தாக்குதல்கள் நடத்தப்பட்டால் அதற்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என ஈரானிய வெளியுறவுத் துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி எச்சரித்திருந்தார்.

இந் நிலையிலேயே சவுதி அரேபியா உள்ளிட்ட பிராந்திய நாடுகளின் தலையீட்டால் இந்த பேச்சு வார்த்தை சூழல் உருவாகியுள்ளது.

ஒப்பந்தம் விரைவாக முடிவுக்கு வராவிட்டால், மீண்டும் அமெரிக்கா ஈரான் மீது போரைத் தொடுக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# பூமியை நெருங்கும் விண்வெளிக் கழிவுகள்
## மனிதகுலத்திற்கு பேராபத்து



பூமியின் தாழ்வட்டப் பாதையில் வலம் வரும் பல்லாயிரக்கணக்கான டன் எடையுள்ள “விண்வெளிக் கழிவுகள்”, கட்டுப்பாட்டை இழந்து பூமியை நோக்கி விழும் அபாயம் அதிகரித்து வருவதாக விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச ஆய்வாளர்கள் தீவிர எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சில தசாப்தங்களாக மனிதர்களால் விண்ணில் செலுத்தப்பட்ட செயற்கைக்கோள்கள், ராக்கெட்டுகளின் பாகங்கள் மற்றும் உடைந்த நுண் பொருட்கள் என சுமார் 13 ஆயிரம் டன்களுக்கும் அதிகமான விண்வெளிக்கழிவுகள் பூமியின் சுற்றுப்பாதையில் மிதந்து வருகின்றன.


ஆயுட்காலம் முடிவடைந்த விண்கலங்கள் மற்றும் செயலிழந்த செயற்கைக்கோள்கள், புவியீர்ப்பு விசையின் காரணமாக மெல்ல மெல்லத் தன் பாதையிலிருந்து விலகி பூமிக்குத் திரும்பி வருகின்றன. பெரும்பாலானவை வளிமண்டல உராய்வால் எரிந்து சாம்பலாகி விட்டாலும், பெரிய அளவிலான உலோகப் பாகங்கள் பூமியின் மேற்பரப்பில் வந்து விழும் அபாயம் உள்ளது.

இந்த விண்வெளிக் கழிவுகள் மணிக்கு பல்லாயிரக்கணக்கான கிலோமீற்றர் வேகத்தில் (விநாடிக்கு சுமார் 7 கி.மீ வரை) சுற்றி வருவதால், அவை தற்போதைய செயற்பாட்டில் உள்ள பிற தகவல் தொடர்பு செயற்கைக் கோள்கள் மீது மோதி பெரிய விபத்துகளை ஏற்படுத்தக்கூடும் என அஞ்சப் படுகிறது.

விண்வெளிக் கழிவுகளின் நகர்வைக் கண்காணிக்க நாசா, ஐரோப்பிய விண்வெளி முகமை மற்றும் சீனா போன்ற நாடுகள் சிறப்பு செயற்கைக்கோள் நெட்வொர்க்குகளைப் பயன்படுத்தி வருகின்றன.

சுவிட்சர்லாந்து மற்றும் பல சர்வதேச அமைப்புகள் “ரோபோடிக் கை” மற்றும் ரோபோட் காந்தங்கள் மூலம் விண்வெளி குப்பைகளைச் சேகரித்து அழிக்கும் புதிய தொழில் நுட்பங்களைச் சோதித்து வருகின்றன.

கட்டுப்பாடற்ற முறையில் பூமியை நோக்கி வரும் விண்வெளிக் கழிவுகள் வளிமண்டலத்தில் நுழையும் போது உருவாகும் வெளிச்சமும், அதனால் ஏற்படும் அசாதாரண மாற்றங்களும் மனித குலத்திற்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் புதிய சவாலாக உருவெடுத்துள்ளன என விண்வெளி அமைப்புகள் தெரிவித்துள்ளன. (க-8)



# ..காடுகளுக்கு மேல் ..மானம் விபத்து
## ..ர் பரிதாபப் பலி



Cessna Caravan C-208 வகையைச் சேர்ந்த விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் 11 சுற்றுலாப் பயணிகளும், 2 விமானிகளும் பயணித்திருந்தனர் எனத் தெரியவரும் நிலையில் விபத்துக்கான காரணம் இது வரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்த விமானம் பெருவின் பிஸ்கோ விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட நிலையிலேயே இக்கொடும் விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (க-8)

பெற்ற தியான மேலே ற்றுலா குள்ளா பேரும் நாட்டு துள்ள

# ஆறு கிலோ எடையில் பிறந்த குழந்தை



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அலபாமாவில் பெண் ஒருவருக்கு 6 கிலோ எடையில் குழந்தை பிறந்து வைத்திய சாலையை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

இந்த குழந்தை அலபாமா கிராண்ட் வியூ மருத்துவமனையில் சிசேரியன் மூலம் இந்தக் குழந்தை உலகிற்கு வந்த நிலையில் பிரசவ அறையில் இருந்த அனைவரும் குழந்தையை பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளனர் .

இது குறித்து குழந்தையின் தாய் கருத்து தெரிவிக்கையில், சிசேரியன் மூலம் குழந்தையை எடுத்தபோது மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அதிர்ச்சியடைந்தனர். அவர்களை பார்த்து நானும் அதிர்ச்சியடைந்தேன்.

குழந்தை 6 கிலோ எடையுடன் மிகப்பெரிய தோற்றத்துடன் இருந்தமை அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முன்பள்ளி சிறார்களுக்கான 'பிள்ளையார் பிடித்தல்' போட்டி

(யாழ்ப்பாணம்)

மலரும் மொட்டுக்களாய் இருக்கும் சிறார்களின் உள்ளத்தில் ஆன்மீக வாசத்தையும் சைவத் தமிழ் கலை கலாசார விழுமியங்களையும் விதைக்கும் நோக்கில் சண்டிலிப்பாய் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில் ஏற்பாடு செய்துள்ள சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் கோட்ட முன்பள்ளி சிறார்களுக்கான ஆன்மீக விளையாட்டுப் போட்டியின் மூன்றாம் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு சண்டிலிப்பாய் ஸ்ரீ சரஸ் வதி அம்பாள் உபதேச திருக்கோவில் வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய தினம் முக்கிய நிகழ்வாக முன்பள்ளி சிறார்களுக்கான பிள்ளையார் பிடித்தல் போட்டி நடைபெறவுள்ளது.

மொடோன் மற்ஸ் அக்கடமியின் அதிபர் B.குகதாசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை அதிதியாக ஓய்வு நிலை பொறியியலாளர் M.ஞானேஸ்வரனும், கௌரவ அதிதியாக ஆசான்.செல்வி.லீலாவதி மாரிமுத்துவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வட்டுக்கோட்டை "நாதஸ்வர வினோத கானன்" இ.தர்சன் கலைஞராக முன்னிலை வகிக்கும் இந் நிகழ்வில் தெய்வீக உரையினை நீர்வேலி கந்தசுவாமி ஆலய "திருமுறைப் பற்றாளர்" சிவஸ்ரீ இ.சுவாமிநாதக்குருக்களும், வரவேற்புரையினை ஈஸ்வர விநாயகர் ஆலய பரம்பரைக்குரு சிவத்திரு. பிறைசூடிகுருவும், உபதேச திருக்கோவில் சார்பாக உரையினை இசையாசிரியர் திருமதி.ஜெ.வினித்தாவும் வழங்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் சைவத் தமிழர் பாரம்பரிய உடையணிதலைப் பின்பற்றி அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய குரு முதல்வர் வேண்டு கோள் விடுத்துள்ளார். (8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1996-இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி-பா-29
உயரம்:5'10"
தகைமை/தொழில்:ACCA,Accountant(டுபாய்)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/17198

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
1 இல் செவ்
கி-பா-53
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:Bsc,Manager (pvt)
எதிர்பார்ப்பு:தகுதியான பெண்
தொ.இ: B/17012

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்:மகம்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:Bsc(QS), CIMA,QS
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/17200

பிறப்பு:1986- இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
கி-பா-57
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: Bsc,Teacher
எதிர்பார்ப்பு:உத்தியோகம்
தொ.இ: B/15077

பிறப்பு: 1986-இந்து
நட்சத்திரம்:பூசம்
கி-பா- 22 1/4
உயரம்:5'6"
தகைமை/தொழில்: HNDA,DO
எதிர்பார்ப்பு: உத்தியோகம்,பட்டதாரி
தொ.இ: B/16925

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1996-RC
நட்சத்திரம்: திருவோணம்
11இல் சூரி செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L,Cashier(pvt)
எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன்
தொ.இ:G/16920

பிறப்பு:1995-RC
நட்சத்திரம்: மிருகசீரிடம்
1 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA,Cleark
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ:G/16609

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 10 1/4
9 இல் சூரி செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS,Doctor
எதிர்பார்ப்பு: Engineer,Doctor
தொ.இ: G/16930

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்: மூலம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bsc,Cancer Research(London)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ:G/16802

பிறப்பு:1998-RC
நட்சத்திரம்:சுவாதி
10இல் சூரி செவ்
கி.பா -49
உயரம்-5'5"
தகைமை/தொழில்: Bsc,Programme Coordinator
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ:G/17034

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 632



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குழந்தையின் மனம்

ஒரு குழந்தை அழுதுகொண்டே இருந்தது. தொட்டிலிலே படுத்துக்கொண்டு.

அவனின் அம்மா அடுப்பங்கரையில் ஏதோ வேலையாக இருந்தார்.அப்பா சும்மா இருந்தார்.

சரி நாம் அழுகையை நிறுத்த ஏதாவது முயற்சி செய்து பார்ப்போமே என்று போனார்.

ஒரு தாலாட்டுப் பாடிப் பார்க்கலாமே என்று ஆரம்பித்தார். அதுவரைக்கும் மெதுவாக அழுது கொண்டிருந்த குழந்தை பலமாக அழ ஆரம்பித்து விட்டது.

குடுகுடு என்று ஓடிவந்து தன் இடத்தில் உட்கார்ந்து கொண்டார். மறுபடியும் பத்திரிகையைப் பார்க்க ஆரம்பித்து விட்டார்.

தாய் வந்து மறுபடியும் ஏதோ சொல்லி அந்தக் குழந்தையை சமாதானம் செய்ய வேண்டிதாய் போய் விட்டது. குழந்தையை அழவைக்கிறது என்றால் அது அப்பாவாலே தான் முடியும்.

அழுகின்ற குழந்தையை அமைதிப்படுத்துவது என்றால் அது அம்மாவாலே தான் முடியும் . இப்படிப் பல அம்மாக்கள் சொல்வது உண்டு. வேறு வழி இல்லாமல் அப்பாக்களும் இதை ஏற்றுக் கொள்வதுண்டு.

இதுவரைக்கும் சரி. இனிமேல் அவர்கள் அப்படி ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

ஏன் என்றால் அவர்களாலேயும் குழந்தையினுடைய அழுகையை நிறுத்த முடியும் .அதற்கு ஒரு வழி இருக்கு. இப்போது சொல்லிக் கொடுக்கிறேன்.

வேறு ஒன்றுமில்லை. உங்கள் வீட்டுக் குழந்தை அழ ஆரம்பிக்கிறதா?

உடனே ஒரு டேப் ரெக்கோர்டரை எடுத்துக்கொண்டு அதன் அருகில் போங்கள். அது அழுவதை அப்படியே நன்றாகப் பதிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள்.

அந்த குழந்தை மறுபடியும் எப்போது அழ ஆரம்பிக்கிறதோ இந்த "டேப்" பை உடனே அதற்குப் போட்டுக் காட்டுங்கள்.

அது "கப்சிப்" என்று அழுகையை நிறுத்திவிடும்.

அதே மாதிரி ஒரு மருந்துப் போத்தலை குழந்தை தொடக்கூடாது என்று நினைத்தீர்கள் என்றால் அந்த போத்தலின் மேலே ஒரு அழுகின்ற குழந்தையின் படத்தை ஒட்டி வையுங்கள்.

அதைப் பார்த்தால் குழந்தைகள் அதை தொடுவதற்கு தயங்க ஆரம்பித்து விடும்.

அவுஸ்திரேலியாவில் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் சோதனை செய்து பார்த்துவிட்டு இதைச் சொல்கின்றார்கள்.

ஆக ஒரு குழந்தை அழுகின்ற சத்தத்தைக் கேட்டால் இன்னொரு குழந்தை அழுகையை நிறுத்திவிடும்.

ஒரு குழந்தை அழுவது போல உள்ள படத்தை இன்னொரு குழந்தை தொடுவதற்கு யோசிக்கும்.

இதுதான் இன்றைக்குத் தகவல்.

ஒரு வீட்டிலே ஒரு குழந்தை அழுது கொண்டே உட்கார்ந்திருந்தது. எதிரில் அதன் அப்பா உட்கார்ந்து கொண்டு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். என்ன சொல்கின்றீர்கள் குழந்தையிடம் என்று கேட்டேன்.

நீ அழுவதை நிறுத்தினால்த்தான் நான் ஒரு பாட்டு பாடுவேன் என்று சொன்னேன் என்றார். நீங்கள் இப்படி சொல்வதனால் தான் அந்தக் குழந்தை நிறுத்தாமல் அழுது கொண்டிருக்கிறது. எங்கே அழுகையை நிறுத்தினால் நீங்கள் பாட ஆரம்பித்துவிடுவீர்களோ என்கின்ற பயம் அதற்கு. அப்படி எல்லாம் குழந்தையை பயமுறுத்தாதீர்கள் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கல்லீரல் கொழுப்பும் உணவுமுறையும் (Fatty Liver)



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சகஜமான, பரவலான பிரச் சினையாக இருப்பதில் கல் லீரல் கொழுப்பும் (fatty liver) முக்கியமான ஒன்றாகும். முன்பு எல்லாம் அல்கஹோல் எடுப்பவர்களுக்குத்தான் இப் பிரச்சினை ஏற்படும். ஆனால் தற்காலத்தில் வாழ்வியல் முறை மாற்றங்கள், உணவு முறை மாற்றங்களால் பெரும்பாலானோர் இக் கல்லீரல் கொழுப்பு தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

இதனை Non alcoholic fatty liver என அழைப்பர். அதாவது மது அருந்தாதவர்களுக்கு ஏற்படும் Fatty liver. இது உடற்பருமன், நீரிழிவு நோயாளிகளுக்கு கூடுதலாக ஏற்படுவதனால் இதனை Metabolc syndrome Associated fatty liver என குறிப்பிடுகின்றனர்.

சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் மூலிகைகளுள் ஈரலை பலப்படுத்தக் கூடிய பல மூலிகைகள் (liver tonic) கைம்மருந்தாகவும், உணவு முறையாகவும் பயன்படுத்தப்படுகிறது.

இதனால் தான் பல நோய்களுக்கும், பல சித்த மருந்துகளிற்கும் பத்திய, அபத்திய உணவு முறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

பொதுவாக மது அருந்துபவர்களுக்கு அதாவது அல்கஹோல் உடலில் எந்தக் கலங்களாலும் கிரகிக்கப்பட முடியாததால் உடனடியாக ஈரல் தான் அவ் அல்கஹோலில் உள்ள நஞ்சை அகற்ற முயற்சிக்கிறது.

இதனால் தான் மது அருந்துபவர்களுக்கு ஈரல் கலங்கள் பாதிக்கப்படுகின்றன.

அதாவது நொதியங்களுள் நிறைய மாற்றம் நிகழ்ந்து ஈரல் கலங்களுக்குள்ளேயே கொழுப்பு தேங்க வேண்டிய நிலை ஏற்படும்.

ஆனால் பெரும்பாலும்



Non alcoholic fatty liver ஏற்பட உடற்பருமனும், நீரிழிவு நோயும் தான் முக்கிய காரணமாகும்.

கல்லீரல் கொழுப்பு எவ்வளவு சதவீதம் ஏற்பட்டுள்ளது என்பதை பொறுத்தே அதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்.

இது பெரும்பாலும் அறி, குறிகளை ஏற்படுத்தமாட்டாது. எதேட்சயமான வேறு பிரச்சினைகளுக்கு மருத்துவ பரிசோதனைகள் செய்யும் போது கண்டுபிடிக்கப்படலாம்.

காமாலை நோயின் குணங்குறிகளும் காணப்படலாம்.

கண் மஞ்சள் ஆதல், தோல் மஞ்சள் நிறமாதல் போன்ற குணங்குறிகள் ஏற்படுவது கூட கல்லீரல் கொழுப்பு படிதல் என்பதன் ஒரு காரணமாக இருக்கலாம்.

உணவுமுறை, பழக்க வழங்கங்களால் இந் நிலைமையை கட்டுப்பாடாக வைத்துக் கொள்ள முடியும்.

முதலில் மது அருந்தும் பழக்கம் இருந்தால், அதனை நிறுத்த வேண்டும்.

மது அருந்தாதவர்களுக்கு ஏற்படும் கல்லீரல் கொழுப்பிற்கு, சீனி, சர்க்கரை, சொக்லேற்று, இனிப்பு வகைகள், ஐஸ்கிறீம் போன்ற பாவனைகள் காரணமாக இருப்பதால் இதனைக் கட்டாயமாக தவிர்க்க வேண்டும்.

பழங்கள் கூட மிதமான அளவில் எடுத்துக் கொள்ள வேண்டும். பழங்களைக் கூட யூஸாக பயன்படுத்தக் கூடாது. பழத்துண்டுகளாக சப்பிச் சாப்பிட வேண்டும். மாச்சத்து, அதாவது காபோவைதரேற்று சேர்ந்த உணவுகளையும் இயலுமான வரை குறைக்க வேண்டும்.

அதாவது காபோவைதரேற்று உணவுகளை குறைத்து காய்கறி வகைகளை கூடுதலாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நல்ல புரதம் நிறைந்த உணவுகளை சேர்த்துக் கொள்ள வேண்டும். உணவு முறையால் கல்லீரல் கொழுப்பு நிலையை கட்டுப்பாட்டில் கொண்டு வந்தால், அதனைத் தொடர்ந்து கட்டுப்பாட்டில் பராமரித்துவர வேண்டும்.

அத்துடன் நல்ல உடற், பயிற்சியும் மேற்கொள்ள வேண்டும். அதாவது நாம் அதிகமாகச் சாப்பிடும் போது கல்லீரலில் அதிகமாக கொழுப்புப் படியும். முட்டைக்கோஸ், முள்ளங்கி, கரட், பீற்றூட் போன்ற மரக்கறி வகைகளைக் கூட்டி கீரை வகைகள் முளைக்கீரை அறக்கீரை, மிளகு தக்காளிக்கீரை, தொய்யில் கீரை, குப்பைக்கீரை, சண்டி, மூக்கரட்டைக்கீரை போன்ற கீரைவகைகளை மாற்றி, மாற்றி தினம் ஒரு கீரையாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சட்னி வகைகள் தயாரிக்கும் போது கடலைப் பருப்பு. பருப்பு வகைகளை சேர்த்து தயாரிக்க வேண்டும். அதாவது சோறு அல்லது சாதத்தின் அளவைக் கட்டாய மாக குறைத்துக் கொள்ள வேண்டும். பீசா, பேகர் போன்ற உணவு வகைகளையும் இயலுமானவரை தவிர்க்க வேண்டும்.

பேக்கரி உணவுப் பொருட்களையும் தவிர்க்க வேண்டும். வேப்பிலை கல்லீரல் கொழுப்பை குறைப்பதில் சிறந்த மூலிகை. வாரத்தில் ஒரு நாளாவது வேப்பிலைச்சாறு 20-30 மில்லி அருந்த வேண்டும்.. உள்ளியும் சிறந்த மூலிகை அலீசின் கல்லீரலை பாதுகாப்பதில் சிறந்த வேதியற் பொருளாகும். தினமும் இரவில் 3 பல்லு உள்ளியாவது சாப்பிட வேண்டும்.

மஞ்சள், அதாவது மஞ்சளில் இருக்கும் Curcumin எனும் வேதியற்சத்து சிறந்ததாகும். அதாவது மஞ்சளை உணவில் சேர்த்துக் கொள்வதோடு, பசுப்பாலில் மஞ்சள் பொடி கலந்து அருந்துவது இன்னும் சிறந்த பலனைத் தரும். அடுத்து வெந்தயம் . வெந் தயத்தில் நார்ச்சத்து, இரும்புச் சத்து மற்றும் நுண் போசனைக் கூறுகள் நிறைய உண்டு. தினமும் 1/2 தேக்கரண்டி வெந்தயத்தை எடுத்துக் கொள்ளலாம்.

கரும்புச்சாறு வாரம் ஒரு முறை அருந்தலாம். கல்லீரலுக்கு சிறந்தது. எண்ணெய் வகைகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும். தேவையென்றால் ஒரு தேக்கரண்டி எண்ணெய்க்கு மேல் பயப்படுத்தக் கூடாது.

செக்கில் ஆட்டிய எண்ணெய் சிறந்தது. அத்துடன் உடல் எடையை குறைக்க தினமும் நடைப் பயிற்சி, அல்லது சைக்கிள் ஓட்டுவதும் சிறந்ததாகும். ஒமேகா- 3 கொழுப்புள்ள மீன்கள் கல்லீரல் கொழுப்பை குறைக்க உதவும்.

அவகாடோ அல்லது சீமைக் கொய்யா போன்ற ஆரோக்கியமான கொழுப்புள்ள பழங்கள் கொஞ்சம் பயன்படுத்தலாம். புளிப்புத் திராட்சைப் பழங்களையும் அளவாக பயன்படுத்தலாம். உடல் எடையைப் படிப்படியாக குறைப்பதும் சிறந்ததாகும்.

# இராசிபலன்

03.08.2026
ஆடி 18, திங்கட்கிழமை
பஞ்சமி முன்னிரவு 9.12 மணிவரை

உத்தரட்டாதி முன்னிரவு 9.08 மணி வரை
சுப நேரம் 12.04-1.34 மணிவரை
இராகு காலம் 7.34-9.04 மணிவரை
ஆடிப் பெருக்கு

சந்திராஷ்டமம்
பூரம், உத்தரம்.

வளவன்

**மேஷம்** வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் ஏற்படலாம், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.

**ரிஷபம்** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், அரசு வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உடல் நலன் சீராகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.

**கன்னி** பயணங்களால் பலனுண்டு, உறவினர் நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும், பொறுமையால் பெருமை சேரும் நாள், பொது வாழ்வில் கௌரவம் கூடும்.

**துலாம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பொது வாழ்வில் சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், முன்னேற்றம் பெறபெரிதும் பாடுபடுவீர்கள்.

**விருச்சிகம்** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர், பெற்றோர் மீது பிரியம் கூடும், உறவினர்களால் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும் பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், வழிபாடு சிறப்பினைத் தரும் நட்பு வட்டம் விரிவடையும் நாள், உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும் நாள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல வித மாக நடைபெறலாம், கற்பனை மிகுதியான நாள், திடீர் பயணங்களால் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

உன்னைத் தவிர வேறு யாரும் உனக்கு அமைதி தர முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1103





"ஆம், இளவரசே! ஈழத்து ஊமைராணி தங்களை உடனே தஞ்சைக்கு அழைத்து வரும்படி என்னை அனுப்பி வைத்தார்"

"ஆகா! அதைப்பற்றி உன்னிடம் கேட்க மறந்தே போனேன். ஈழத்து ராணிக்காகவே நான் இவ்வளவு அவசரமாகப் புறப்பட்டு வந்தேன். அவரைத் தஞ்சாவூருக்கு யாரோ பலவந்தமாகக் கட்டி இழுத்து வந்தார்களாமே? அது உண்மையா?"

"உண்மைதான், ஐயா! ஆனால் முதன் மந்திரி அநிருத்தர் நல்ல நோக்கத்துடனேதான் அவ்விதம் செய்தார்"

"ஓகோ! அநிருத்தர் வேலையா? என் தந்தையிடம் சேர்ப்பிப்பதற்காக அழைத்துச் சென்றிருக்க வேண்டும். பூங்குழலி! முதன் மந்திரியின் நோக்கம் வெற்றி பெற்றதா? அவர்கள் சக்கரவர்த்தியும் ஈழத்து ராணியும் சந்தித்தார்களா?" "ஆம், சந்தித்தார்கள்!"

"என் வாழ்க்கை மனோரதம் நிறைவேறிவிட்டது. இதைக் காட்டிலும் சந்தோஷமான ஏதும் இல்லை. என் பெரியன்னை அருகில் இருக்கும் வரையில் என் தந்தையின் உயிருக்கு அபாயமும் இல்லை. அந்த மாதரசிக்கு அபூர்வமான வருங்கால திருஷ்டி உண்டு என்பது உனக்குத் தெரியுமே, பூங்குழலி!"

"ஆம், எனக்கு அது தெரியும்! ஈழத்து ராணி இருக்கும் வரையில் சக்கரவர்த்திக்கு அபாயம் இல்லை. ஆனால்!" "ஆனால் என்ன? ஏன் தயங்கி நிற்கிறாய் சமுத்திரகுமாரி!"

"சொல்லத் தயக்கமாகவே யிருக்கிறது, நா எழவில்லை. ஈழத்து ராணி தம்முடைய இறுதிக்காலம் நெருங்கிவிட்டதாக எண்ணுகிறார். கடைசியாகக் கண் மூடுவதற்கு முன்னால் தங்களை ஒருமுறை பார்க்க விரும்புகிறார்!" என்றாள்.

"தெய்வமே! இது என்ன சொல்லுகிறாய்? சந்தோஷமான செய்தியைச் சொல்லி விட்டு, உடனே இந்தப் பேரிடி போன்ற செய்தியையும் சொல்லுகிறாயே! இனி நான் ஒரு கணமும் தாமதிப்பதற்கில்லை, வானதி! இளைய பிராட்டியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாகச் சொல்லு!" என்றார் இளவரசர் அருள்மொழிவர்மர்.

### அத்தியாயம் - 23
### படைகள் வந்தன!

தஞ்சைமா நகரம் அன்று முழுதும் ஒரே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. புயலையும், மழையையும் அவற்றினால் நேர்ந்த சேதங்களையும் மக்கள் அடியோடு மறந்து விட்டார்கள்.

"ஈழங்கொண்ட வீராதி வீரரும், சோழ நாட்டு மக்களின் இதயங்கொண்ட இளவரசருமான பொன்னியின் செல்வர் நாகைப்பட்டினத்தில் புயல் அடித்த அன்று வெளிப்பட்டு விட்டார் பின்னர் தஞ்சையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார் அவரைச் சிங்காசனத்தில் ஏற்றி வைத்துச் சக்கரவர்த்தியாக முடிசூட்டும் நோக்கத்துடன் பெருந்திரளான மக்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள்" என்னும் செய்திகள் முதலியன வதந்திகளாகக் காற்று வாக்கில் வந்தன. பின்னர், நேரில் இளவரசரை நாகைப்பட்டினத்தில் பார்த்தவர்களே வந்து சொன்னார்கள்.


(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

யோசப் பாலாவின்...

## பேரோடும் புகழோடும்



விறு விறு என வேகத்துடன் சுந்தரத்தார் வருவதைக் கண்டு என்ன அவசரமாக ஓடித் திரியிறீர் என்ற கனேசுவின் கேள்விக்குப் பதிலாக கற்கண்டு சரை ஒன்றை கனேசுவின் கையுக்குள் புதைத்து, தனக்கு ஒரு வாரிசு பிறந்த நல்ல செய்தியை சொல்லி நல்ல பெயர் ஒண்டு சொல்லும் கனேசா பிள்ளைக்கு பெயர் வைக்க வேணும் என்றதும்.

கனேசன் ஆவலோடு சொன்னான். இதற்கா அதிகம் யோசிக்கிறீர் இது ஒருநாளில் முடிகிற வேலையா, வாழ்நாள் முழுவதும் சொல்கிற கதையாச்சே இதைப் போய் சாதாரணமாக்கலாமா? என்றார் சுந்தரம்.

ஓம் ஓம் முன்னைய காலம் என்றால் சாமிப் பெயர்கள், குலதெய்வத்தின் பெயர்கள், பரம்பரைப் பெயர்கள் என்று இணைத்து வைப்பினம். அந்த பேரே ஒரு ஊர் பரம்பரையை சொல்லும், அதைவிட பிறகு பிறகு உலகத் தலைவர்கள், நாட்டுத்தலைவர்கள், சாதனையாளர்கள், சினிமா நடிகர்கள் என பேரை வைத்து அவர்களைப் போல வரவேண்டுமென மூத்தவர்கள் சொல்வார்கள். இப்போது தானே சாத்திரம் பார்த்து, நம்பர் பார்த்து, நாலுக்குள், மூன்றுக்குள், ஐந்துக்குள், ஒன்றுக்குள் வர வேண்டும் என்று சாத்திரி சொன்னதுக்கு அடங்க பேரை சுருக்கி, எழுத்தை மாத்தி தலையெழுத்தையே புரியாமல் வைக்கிறார்கள் என ஆதங்கத்தைக் கூறினார் கனேசர்.

இப்ப அப்பன் பேரோ, ஆண்டவன் பேரோ, பரம்பரை [illegible] பெயரோ, யார் வைக்கினம்? டொச்சு, குச்சு, பொச்சு எண்டு வாயில வராத பெயர்களை வைத்து தலை எழுத்தே மாத்தி பெயரே யார் என்று புரியாமல் இருக்கு பாரன்.

ஓம் கனேசா அதுதான் கன பெயரை தேடினாலும் இப்ப உள்ள இளசுகள் பழசுகளின்ர சொல்லை கேட்கவா போகிறது. எதற்கும் பெயர்களை எடுத்து கொடுப்பம். இப்ப எல்லாம் அன்ன நடை[illegible]க்கப்போய் தன் நடையே இழந்த காகத்தின்ர கதையாகத்தான் எங்கட அடையாளங்கள் அன்னியப்பட்டு ஊர் பேர் தெரியாமல் அடுத்த பரம்பரை உருவாக நாங்களே தலை எழுத்த துலைக்கிறம் என்பதை இப்ப உள்ள சந்ததியள் உணர மறுத்து இன,மத, உறவுகளைக் கூட யார் என்று தெரியாமல் அலையுது.

ஓம் கனேசா உன்ர பேரிலயும் எங்கட குலதெய்வத்தை நினைக்கிறன். இதுபோல பேருக்கு ஏற்ற பிள்ளையளா வாழ வேண்டும் என்று தானே பேர் வைக்கிறதே ஒரு விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்த காலம் அது. பேரால பெரியவனா இருந்தால் தானே அந்தக் காலத்தில் பெருமதிப்புடன் வாழ வேண்டும் என்ற எண்ணமும் சிறுசுகளுக்கு வரும்.

அப்படியும் சொல்ல ஏலாது தான் பார் ஆரோக்கியசாமி நோஞ்சானாக ஆஸ்பத்திரியில் கிடக்கிறார். செல்வராசா அந்த கோவில் முற்றத்தில பிச்சைப் பாத்திரம் ஏந்தி நிற்கின்றார். இப்படி எத்தனை பேர் தன் பேருக்கு பெருமை சேர்த்து வாழப்பழகணும் என எண்ணுதுகள். அதுதான் அவர்களின் பெயரும் அடையாளமாகணும் பார் என்ற கனேசனுக்கு "இதை எல்லாம் தங்கட முயற்சியால தானே பெருமை சேர்க்கலாம் என்றான் சுந்தரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பேசப்படும் சொல்லை விட எழுதப்படும் சொல்லே வலிமை வாய்ந்தது.

– ஹிட்லர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிறைச்சாலைகளில் மூளும் கலவரம் குற்றவாளிகளின் புதிய கலாசாரம்

ஊழல், இலஞ்சம், போதைப்பொருள், பாதாள உலகக்குழுக்கள் என எங்கும் வேரூன்றி இருக்கக்கூடிய குற்றச்செயல்களில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது சாதாரண விடயமன்று.

இருந்தும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாட்டை குற்றவாளிகளிடமிருந்து மீட்டெடுக்கும் தனது முயற்சியிலிருந்து தளரவில்லை என்பதை இங்கு கூறித்தான் ஆக வேண்டும்.

ஆம், இந்த நாட்டை நாசமாக்கும் போதை வஸ்து வர்த்தகத்தில் இந்த நாட்டின் மிகப் பெரும் புள்ளிகள் தொடர்புபட்டுள்ளன. அது மட்டுமின்றி, முன்னைய ஆட்சியாளர்களாக இருந்த சில தரப்புகளுடன் குறித்த போதை வஸ்து வர்த்தகர்கள் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளனர்.

இதேவேளை, ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளில் இருந்து கிடைக்கப்பெறும் தகவல்களை அறியும் போது வேலியே பயிரை மேய்ந்தமை தெரியவருகிறது.

இதற்கும் அப்பால், இந்த நாட்டில் ஆட்சிப் பீடத்தில் இருந்தவர்கள் செய்து முடித்த இலஞ்ச ஊழல் மோசடிகள் சொல்லிமாளா.

அதிலும் போதைப்பொருள் மாபியாக்களைக் காப்பாற்றுவதற்காக அமைச்சர்களாக இருந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பெற்றுக்கொண்ட இலஞ்சத் தொகைகளை அறியும் போது இதயம் நொருங்கிப்போகும். அந்தளவுக்கு நிலைமை மிக மோசமாக உள்ளது.

இவ்வாறாக யாரை நம்புவது யாரை நம்பாமல் விடுவது என்று தெரியாத ஒரு இக்கட்டான சூழ்நிலையில், குற்றவாளிகளுக்கு எதிராக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் வெற்றியளிக்க வேண்டுமாயின், அதற்கான ஒரே வழி பொதுமக்கள் தமது ஆத்மார்த்தமான ஒத்துழைப்பை வழங்குவதாகும்.

ஆம், உயிர்காக்கும் மருந்துப் பொருட்களில் கூட ஊழல் செய்த சுகாதார அமைச்சர் ஒருவர் இருந்தார் என்றால், அதைவிட்ட கொடுமை வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

இதற்கும் மேலாக, நாட்டில் பெரும் குற்றவாளிகளதும் அவர்களுக்கு உதவுகின்ற அதிகாரிகளதும் கைகள் ஓங்கிய நிலையில், அவற்றை அடக்கி நாட்டை ஒரு சரியான பாதைக்குக் கொண்டு வருவது என்பது சாதாரணமான காரியம் அன்று.

உண்மை. இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகள் புரிந்தவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்ததன் விளைவாக – பாதாள உலகக்குழு சார்ந்தவர்களை வெளிநாடுகளில் வைத்துக் கைது செய்து அவர்களை இங்கு கொண்டு வந்து சிறையில் வைத்து பூட்டியதன் விளைவாக – ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் பின்னணியில் இயங்கியவர்களுக்கு மரண தண்டனை விதித்ததன் காரணமாக குற்றவாளிகள் ஒரு புதிய தாக்குதல் கலாசாரத்தைத் தொடக்கி வைத்துள்ளனர்.

ஆம், சிறைச்சாலைகளில் இப்போது நடக்கின்ற வன்முறைகள் என்பன வெளியில் இருக்கும் குற்றவாளிகள் தீட்டிய திட்டங்களை சிறைக்குள் இருக்கும் குற்றவாளிகள் அரங்கேற்றுகின்ற நாடகம் ஆகும்.

இங்குதான் பொதுமக்களும் சிறைச்சாலை அதிகாரிகளும் தூய சிந்தனையோடு செயலாற்ற வேண்டியவர்களாக உள்ளனர்.

ஆம், சிறைச்சாலைக் கலவரங்கள் மூலம் நாட்டு மக்களை குழப்பத்திற்கு ஆளாக்குகின்ற மோசமான திட்டம் முறியடிக்கப்பட வேண்டும்.

இதில் அரசாங்கம் மிகவும் விழிப்புடன் செயலாற்றுவது கட்டாயமானது.

# ராஜபக்ஷாக்கள் செய்ததையே அநுர அரசும் செய்கின்றது

## வசாவிளான் போராட்டத்தில் தவிசாளர் நிரோஷ்

(யாழ்ப்பாணம்)

ராஜபக்ஷாக்கள் தமிழர்கள் விடயத்தில் எதைச் செய்தார்களோ அதையே அநுர அசாங்கமும் தமிழர்களுக்குச் செய்கின்றது என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கு வசாவிளான் மக்கள் தமது மீள் குடியேற்றத்தினை வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தம் என ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மக்களின் உரிமைகளை ஏற்க மறுக்கின்றது. இப்போது ஆட்சியில் இருப்பவர்களும் கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த ராஜபக்ஷாக்களையோ அல்லது மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஏனைய அரசாங்கங்களையோ ஒத்ததாகத் தாங்களும் சளைத்தவர்கள் இல்லை என்பதை வெளிப்படுத்தி வருகின்றன.

வசாவிளானில் அமையப்பெறும் இராணுவ வைத்தியசாலை பொதுமக்களின் காணிகளை இராணுவ அதிகாரங்களைப் பயன்படுத்தி அங்கு வாழ்ந்த பூர்வீகக் கிராம மக்களை வலோத்காரமாக வெளியேற்றி விட்டு அந்த மக்கள் வீடற்றவர்களாக முகாம்களில் வசிக்கும் போது ஆக்கிரமித்து கட்டப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் தற்போது அமைக்கப்பட்டு வரும் சட்டங்கள், ஒழுங்குவிதிகளுக்குப் புறம்பான இந்த இராணுவ வைத்தியசாலையை அகற்ற வேண்டும் என மாவட்ட அபிவிருத்திக் குழுவில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தினை நானே வழிமொழிந்தேன். அவ்விடயம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அறிக்கையிலும் எனது பெயரை கோடிட்டுக்காட்டி சகல திணைக்களங்களுக்கும் அனுப்பப்பட்டது.

ஆனால் போயா தினங்களில் கூட அங்கு வீரியமான முறையில் கட்டிடம் அமைக்கப் படுகின்றது.

ஆகவே இங்கே நடப்பவற்றை பார்க்கும் போது சொல்லளவில் அரசாங்கம் பலவற்றை பேசினாலும் செயலளவில் ராஜபக்சாக்களை ஒத்ததாகவே இருக்கின்றது. நாட்டில் இலஞ்சத்தினையும் ஊழலையும் ஒழிக்கின்றார்கள். அதனை நாம் வரவேற்கின்றோம். ஒரு இனத்தின் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அரச அராஜகங்கள், படுகொலைகள், இராணுவ மயமாக்கம் பற்றி நடவடிக்கை எடுக்கின்றீர்கள் இல்லை. காரணம் இந் நாட்டில் தமிழர்கள் என்றால் எதையும் செய்ய முடியும் என்ற சிங்கள பேரினவாத மனநிலை இன்றைய ஆட்சியாளர்களின்உள்ளங்களுக்குள்ளும் உள்ளதா? எனக் கேள்வி எழுப்புகின்றோம் என்றார். (ம-7)

## ஆண்டுதோறும் ஐந்து மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு

### 2027 ஆம் ஆண்டு முதல் மாவட்டங்களுக்கு நேரடி நிதி

(கொழும்பு)

ஆண்டுதோறும் ஐந்து மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் 2027 ஆம் ஆண்டு முதல் மாவட்டங்களுக்கு நேரடி நிதி ஒதுக்கப்படும் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் சுற்றுலாத்துறையில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையிற்கு அதிக திறனுள்ள தொழிலாளர்களை உருவாக்குவது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

ஆண்டுதோறும் ஐந்து மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இலக்கை அடைவதை எளிதாக்குவதற்காக, அமைச்சின் ஊடாக நிதி ஒதுக்கும் நடைமுறைக்குப் பதிலாக, 2027 ஆம் ஆண்டு முதல் நிதி அமைச்சின் ஊடாக நேரடியாக மாவட்டத்திற்கு நிதியை ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மேலும், மாவட்ட மட்டத்தில் சுற்றுலாத் துறையின் பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வு காண்பதற்காக, மாவட்ட செயலாளரின் தலைமையில் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் மற்றும் பொலிஸார் அடங்கிய உப குழுவொன்றை நியமித்து இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக "அறுகம்பை சன்செட் வியூ" இடத்தை அபிவிருத்தி செய்ய 173 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், பாழடைந்து வரும் அரச விடுதிகளை அரச-தனியார் பங்களிப்புடன் சுற்றுலா விடுதிகளாக நடாத்திச் செல்வதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இதுதவிர, கிழக்கு மாகாணத்தில் காணப்படும் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமாகக் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவித்து அபிவிருத்திக்கு உட்படுத்துவதற்கும் விசேட அமைச்சரவைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை நீடிப்பதற்கு

### சட்டமா அதிபர் அனுமதி

(கொழும்பு)

நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை நீடிப்பதற்காக தயாரிக்கப்பட்ட சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளது.

குறிப்பிட்ட சட்டமூலம் தொடர்பிலான சட்டபூர்வ விளக்கமளிப்பு நீதி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளதாகச் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நீதி அமைச்சினால் குறித்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வர்த்தமானி மூலம் வெளியிடப்படவுள்ளது.

நீதிபதிகளின் ஓய்வு பெறும் வய்தை 02 வருடங்களால் நீடிப்பதற்கான முன்மொழிவொன்று அண்மையில் நீதி அமைச்சினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருந்தது.

தற்போது நாடு முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களில் 11 இலட்சத்திற்கும் அதிகமான வழக்குகள் தேங்கிக் கிடப்பதால், அவ்வழக்குகளை விரைவாக விசாரித்து முடிப்பதே இத் தீர்மானத்தின் நோக்கமாகும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆவணி மாத இராசி பலன்கள்



(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)

**கிரகநிலை-** தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய் - தைரிய வீரிய ஸ்தானத்தில் சூரியன், புதன், குரு - பஞ்சம ஸ்தானத்தில் சுக்கிரன், கேது - இலாப ஸ்தானத்தில் ராகு, சந்திரன் - அயன சயன போக ஸ்தானத்தில் சனி (வ) என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** குடும்ப பாசம் மிகுந்தவரான மேஷ இராசியினரே நீங்கள் விட்டுக்கொடுத்து வாழ்வதன் மூலம் சிறப்பான பலன்களை பெறுவீர்கள். இந்த மாதம் உடல் ஆரோக்கியம் உண்டாகும். பூமி, வீடு தொடர்பான பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மனவருத்

## உடல் ஆரோக்கியம் உண்டாகும்

தங்கள் நீங்கும். கோபம், படபடப்பு குறையும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்படும். தாயின் உடல் நிலையில் கவனம் தேவை.

தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும். பண வரத்து தடைப்பட்டாலும் வந்து சேரும். வியாபார பொறுப்புக்களை மற்றவர்களிடம் ஒப்படைக்கும் போது கவனம் தேவை. உத்தியோகஸ்தர்கள் அலுவலக பொறுப்புகளை கவனமாக செய்வது நல்லது. இயந்திரங்களில் பணி புரிபவர்கள் ஆயுதங்களை கையாள்பவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது செயற்படுவது அவசியம். குடும்பத்தில் இருப்பவர்களது பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும்.

கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது. பெண்களுக்கு கோபம், படபடப்பு குறையும். மற்றவர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். திடீர் செலவு உண்டாகலாம். மாணவர்களுக்கு உயர்கல்வி படிப்பவர்களுக்கு திடீர் பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வாகனங்கள் மூலம் செலவு உண்டாகும்

**அஸ்வினி:** இந்த மாதம் உறவினர்கள் வகையில் தவிர்க்க முடியாத சுபச் செலவுகளை சுமக்க நேரும். முக்கியமான பயணமும், முக்கிய பிரமுகர்களின் சந்திப்பும்




உண்டாகும். அது உங்கள் எதிர்காலத்துக்கு நல்ல அஸ்திவாரமாக இருக்கும். சிலர் கூட்டு முயற்சிகளில் இலாபம் தேடலாம். சிலர் குடும்பத்தினரோடு கூட்டுச் சேர்ந்து தொழில் செய்து இலாபம் பார்க்கலாம்.

**பரணி:** இந்த மாதம் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில், வேலை, உத்தியோகம் ஆகியவற்றில் வெற்றி அடையலாம். சேமிப்பும் அடையலாம். உங்கள் உழைப்பும் நம்பிக்கையும் உங்களுக்கு முழுமையான பலனையும் திருப்தியையும் தரும். எதிர்ப்பும் இடையூறும் ஒருபுறம் இருந்தாலும், உங்களின் தன்னம்பிக்கையாலும் தைரியத்தாலும் அவற்றைப் போராடி எதிர்த்து நின்று வெற்றி கொள்வீர்கள்.

**கார்த்திகை 1 ஆம் பாதம்:** இந்த மாதம் கடமைகளைக் காப்பாற்றுவீர்கள். பொருளாதாரத்தில் பிரச்சினை இருக்காது என்றாலும், வைத்தியச் செலவும் அல்லது வீண் விரயச் செலவும் தவிர்க்க முடியாததாக இருக்கும். அதனால் சில சமயம் விரக்தி ஏற்படலாம். மனதில் ஆறுதலும் நம்பிக்கையும் உண்டாகும். தொழில், வியாபாரம், உத்தியோகத்தில் பிரச்சினை இருக்காது.

**பரிகாரம்:** செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் துர்க்கை அம்மனை வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும். வீண் அலைச்சல் குறையும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 20, 21, 22.

**அதிர்ஷ்ட தினங்கள்:** 13, 14, 15.



கார்த்திகை 2, 3, 4 பாதங்கள், ரோகிணி, மிருக சீரிடம் 1, 2, பாதங்கள்

**கிரகநிலை-** இராசியில் செவ்வாய் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன், புதன், குரு - சுகஸ்தானத்தில் சுக்கிரன், கேது - தொழில் ஸ்தானத்தில் ராகு, சந்திரன் - லாப ஸ்தானத்தில் சனி (வ) என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** அடுத்தவரின் உதவியை எதிர்பார்க்காத ரிஷப இராசியினரே நீங்கள் பிரச்சினையை கண்டு பயப்படமாட்டீர்கள். இந்த மாதம் கோபமான பேச்சு, டென்ஷன் குறையும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பணியாளர்கள் மூலம் நன்மை கிடைக்கப் பெறுவார்கள். இலாபம் கூடும். எதிர் பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி அமைதியாக பணிகளை கவனிப்பார்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும்.

கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்க முற்படுவீர்கள்.

பெண்களுக்கு எடுத்த காரியத்தை எப்படியும் முடித்து விட வேண்டும் என்பதில் மன உறுதி காணப்படும். கொடுக்கல், வாங்கல் விவகாரங்களில் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது.

மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனகுழப்பம் நீங்கி படிப்பில் கவனம் செலுத்துவீர்கள்.

**கார்த்திகை 2, 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் கடந்த காலத்தில் உங்களை விட்டுச் சென்றவர்கள் விரும்பி வந்து சேர்வார்கள். உறவு பலப்படும். தொலைபேசித் தொடர்பு மூலமாக




## மனதில் துணிச்சல் அதிகரிக்கும்

சிலர் புதிய தொழில் ஒப்பந்தங்களை ஏற்படுத்தி இலாபம் தேடும் முயற்சியில் ஈடுபடலாம்.

குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறை இருக்காது. சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.

**ரோகிணி:** இந்த மாதம் சில அத்தியாவசிய தேவைகளுக்கு செலவு செய்ய பணப்பற்றாக் குறையை சந்திக்கலாம். ஒரு பிரச்சினை முடிந்ததும் இன்னொரு பிரச்சினை உருவாகலாம். ஆனாலும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் பிரச்சினைகள் எவ்வளவு இருந்தாலும் தோல்வியும் தொய்வும் இல்லாமல் சமாளித்து ஜெயிக்கலாம்.

**மிருக சீரிடம் 1, 2, பாதங்கள்:** இந்த மாதம் எடுத்த காரியங்களில் உடனே வெற்றி ஏற்படும். சில காரியங்களில் தாமதமாக வெற்றி ஏற்படும். உங்கள் விடாமுயற்சிதான் உங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும்.

பழகும் நண்பர்களை எடைபோட முடியாது. வெளுத்தது எல்லாம் பால் என்று நம்பும் உங்கள் பெருந்தன்மையை கொஞ்சம் ஒதுக்கி வைக்கவும்.

**பரிகாரம்:** பௌர்ணமி அன்று நவக்கிரகத்தில் சுக்கிரனை பூஜிக்க வாழ்க்கையில் மகிழ்ச்சி உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும்

**சந்திராஷ்டம தினங்கள்:** 23, 24.

**அதிர்ஷ்ட தினங்கள்:** 16, 17.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மன்னாரில்...

இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை (01) இரவு 7.30 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் முத்தரிப்புத்துறையைச் சேர்ந்த அந்தோனி ஜெரோம் (வயது - 18) என்ற இளைஞனே உயிரிழந்த வராவார்.

குறித்த இளைஞன் பள்ளமடு சந்தி வீதியில் மடுத்திருத்தலப் பகுதியில் தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்று கொண்டிருந்த போது வீதித் தடையைக் கடக்க முற்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து தூக்கி எறிந்ததில் இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மடுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,285)

## வல்வைப்...

வடமராட்சி வல்வைப் படுகொலையின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகரில் தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ்த்தேசியப் பேரவை (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) யினரின் ஏற்பாட்டில் குறித்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

1989.08.02 அன்று இந்திய இராணுவத்தினரால் வல்வெட்டித்துறைப் பகுதியில் நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டின் போது 72 பொது மக்கள் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். ஸ்ரீகாந்தா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,30,60)

## மோ.சைக்கிள்...

இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே உயிரிழந்தவராவார்.

கார் மற்றும் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பில் காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## யாழில் விபரீத...

மாய்த்துள்ளனர்.

நேற்று முன்தினம் வீட்டில் யாரும் இல்லாதவேளை தமக்குத் தாமே தீ மூட்டியுள்ளனர். இந்நிலையில் அவர்கள் காப்பாற்றப்பட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர்கள் இருவரும் நேற்று அதிகாலை உயிரிழந்தனர்.

வாழ்வதற்கு விருப்பமில்லாத காரணத்தால் இவ்வாறு செய்ததாக அவர்கள் உயிரிழப்பதற்கு முன்னர் வாக்குமூலம் வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## பட்டாசு...

யாழ்ப்பாணம் குருநகர் அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதியில் நேற்று (2) அதிகாலை 2 மணியளவில் இந்த விபரீதம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வராசா கசிபன் (வயது - 32) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

மடு மாதா திருத்தலத்தின் ஆவணி மாதப் பெருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் பக்தர்கள் பாத யாத்திரை செல்வது வழமை. இவ்வாறு பாத யாத்திரை செல்ல இருந்த பக்தர்கள் குருநகர் பகுதியிலுள்ள மாதா கோயிலில் வழிபாடு செய்து விட்டு பட்டாசு கொழுத்தியுள்ளனர்.

அதில் ஒரு பட்டாசு வெடிக்காது இருந்துள்ளது. அந்த பட்டாஸை இந்த நபர், வாயால் ஊதி கொழுத்திய போது பட்டாசு முகத்திற்கு முன் வெடித்துள்ளது.

பட்டாசு வெடித்ததில் மண்டை பிளந்து, மூளை சிதறி மரணம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## காணிகளை...

வலி.வடக்கில் இருந்து 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் வெளியேற்றப்பட்ட மக்கள் 36 வருடங்கள் கடந்தும், அவர்களின் சொந்த இடங்களுக்கு மீள திரும்ப அனுமதிக்கப்படவில்லை.

குறித்த பகுதிகள் இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அப்பகுதி மக்கள் தமது சொந்தக் காணிகளுக்கு திரும்ப முடியாத நிலையில் வாடகை வீடுகளிலும் நண்பர்கள் வீடுகளிலும் வசித்து வருகின்றனர்.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்களாகத் தம்மை தமது சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறு கோரி போராடி வருகின்றனர்.

இந்நிலையில் வலி. வடக்கைச் சேர்ந்த மூன்று கிராம மக்கள் தமது காணிகளை விடுக்கக் கோரி போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

அந்த வகையில், மயிலிட்டி கிராம மக்கள் பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் பலாலி மக்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் போராடி வரும் நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் வசாவிளான் மக்களும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

போராட்டத்தின் முடிவில், வசாவிளான் பகுதியில் உள்ள இராணுவத்தினர் ஊடாக யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதிக்கு தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி மகஜர் கையளித்துள்ளனர்.

அதேவேளை தமது காணிகளை விடுவிக்குமாறு மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை முதல் மதியம் வரையில் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

ஏற்கெனவே மயிலிட்டிப் பகுதி மக்கள் தமது காணி ... பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் பலாலி மக்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## சீரற்ற வானிலை...

வாவப் பகுதியிலிருந்து கடலுக்குச் சென்ற படகொன்று நேற்று முன்தினம் கவிழ்ந்து விபத்துக்குள்ளான நிலையில், அதில் பயணித்த இருவர் உயிரிழந்ததுடன் அதிலிருந்து மேலும் ஒருவர் வேறொரு படகினால் உயிருடன் மீட்கப்பட்டார்.

இதேவேளை, சிலாபம் - தொடுவாவ பகுதியிலிருந்து கடந்த 31 ஆம் திகதி பிற்பகல் கடலுக்குச் சென்று விபத்துக்குள்ளான படகிலிருந்து காணாமல் போன இரு கடற்றொழிலாளர்களில் ஒருவரது சடலம் நேற்று கொள்ளுப்பிட்டிய பகுதியில் கரை ஒதுங்கியுள்ளது.

அத்துடன் குறித்த விபத்திலிருந்து அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பிய மற்றைய கடற்றொழிலாளர் மீட்புப் படையினரால் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2026.08.02 — சீட்டிழுப்பு இலக்கம் 6267 — J 8 8 5 5 7 0
அத சம்பத — J 5 5 7 0 — சீட்டிழுப்பு இலக்கம் 0842

சுப தவசக் — திகதி 2026.08.02 — சீட்டிழுப்பு இலக்கம் 0383 — கும்பம் 18 36 55 — 3637

தன நிதானய — திகதி - 2026.08.02 — சீட்டிழுப்பு இலக்கம் - 2297 — O 15 24 44 82 O — 0334

மெகா பவர் — திகதி 02/08/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2615 — B 02 15 39 48 65

ஜய — திகதி 2026.08.02 — சீட்டிழுப்பு இலக்கம் 535 — V 7 2 0 5 — 3790

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4509 — சீட்டிழுப்பு திகதி 02.08.2026 — W 06 22 63 76

ஹதன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.08.02 — சீட்டிழுப்பு இலக்கம் 1576 — துலாம் 06 31 33 39 துலாம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் பண சம்பத — 02.08.2026 — வெற்றி வாரம் 0975 — B 6 0 2 9 8 5 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,673,218.40

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3241 — சீட்டிழுப்பு திகதி 2026.08.02 — 25000 பணப் பரிசு 90299 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 28 42 58 64 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,766,178.40

சனிதா — திகதி 02.08.2026 — வெற்றி வாரம் 5402 — 08 19 43 79 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,978,782.80 — 38032

சசிரி — வெற்றி வாரம் 1071 — சீட்டிழுப்பு திகதி 02.08.2026 — ஞாயிற்றுக்கிழமை — 09 38 42 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,457,800.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4953 — சீட்டிழுப்பு திகதி 02.08.2026 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 01 20 32 45 மிதுனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.9,592,446.40

லக்பதி — 2417 — 02.08.2026 — S 13 24 29 47 58 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.329,955,421.00

அத கோட்டிபதி — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 3067 — சீட்டிழுப்பு திகதி 2026.08.02 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,867,464.80 — 07 40 47 58 C


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹர சிறை...

ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று (2) பிற்பகல் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கைதிகளுக்கு இடையிலேயே மோதல் வெடித்ததாகவும், ஆனால் மஹர சிறைச்சாலையில் கைதிகளுக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் இடையே மோதல் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் விளக்கமளித்தார்.

சிறைச்சாலைகளுக்கு வெளியே உள்ள சில தரப்பினர் திட்டமிட்ட முறையில் இவ்வாறான கலவரங்களைத் தூண்டிவிடுகிறார்களா? என்ற பலமான சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் இவ்வாறான சம்பவங்கள் தற்செயலாக நடப்பதில்லை என்றும், இதன் பின்னணியில் உள்ள வெளிநபர்களின் தலையீடுகள் குறித்து தீவிர விசாரணைகள் நடத்தப்படும் என்றும் உறுதியளித்தார்.

அரசாங்கம் போதைப்பொருளுக்கு எதிராக முன்னெடுத்து வரும் தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, சிறைச்சாலைகளுக்குள் செல்லும் போதைப் பொருளின் அளவு பெருமளவில் குறைவடைந்துள்ளது. இதுவே சிறைச்சாலைகளில் மோதல்கள் உருவாவதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்திருக்கக்கூடும்.

அதேநேரம், சிறைச்சாலைகளில் காணப்படும் அளவுக்கு அதிகமான நெரிசலும் இத்தகைய அசம்பாவிதங்களுக்கு ஒரு காரணமாக அமைவதாகக் குறிப்பிட்ட நீதி அமைச்சர், தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பிருந்தே இந்த நெரிசல் நிலவி வருவதாகவும், அதற்கு நிலையான தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

திடீரென இவ்வாறான குழப்பங்கள் ஏற்படுவதால் நியாயமான பல சந்தேகங்கள் எழுந்துள்ளன. இதுதொடர்பில் விசாரிப்பதற்கான பொறுப்பு உரிய தரப்பினரிடம் ஒப்படைக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், மஹர சிறைச்சாலை அமைதியின்மையின் போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த நபர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு எதிராகச் சட்டத்தின் படி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார். (ம-7)


புதிய பிரிவுகள் ஆரம்பம்
08.08.2026

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AAI, AA2, AA3)
Qualification :- G.C.E O/L 6 Passes
(Medium - Tamil & English)
A/L மாணவர்களின் நலன் கருதி வார நாட்களிலும் aat வகுப்புக்கள் நடாத்த தீர்மானித்துள்ளோம்.

கணக்காளர் கற்கைநெறிகள்
Chartered Accounting Courses
"New Syllabus" - Business Level
Qualification :- G.C.E A/L 3 Passes
(Medium - Tamil & English)

Further Details :- Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
(யாழ்.ஆஸ்பத்திரி வீதியில், கொமர்ஷல் வங்கி அருகில்)
021 222 3382 / 0774405917
(C-6155)



கணக்கீடு
திரு.க.பா.பாலகஜன்
இன்று ஆரம்பம்
A/L 2028 & 2027 புதிய பிரிவுகள்
❖ பாடத்துறை மாறிப்படிக்கும் மாணவர்கள் மற்றும் தனிப் பாடமாக எடுக்க விரும்பும் மாணவர்களுக்குமான புதிய பிரிவுகள்
❖ உங்கள் தெரிவு சிறந்ததாக இருந்தால் உங்கள் கணக்கீட்டு பெறுபேறு உச்சம் பெறும்.
NEC - யாழ்நகர், KBK - கந்தர்மடம்,கொழும்புத்துறை
077 452 0043, 076 535 0999 (C-6153)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-6160)
076 825 7716 (ஆகாஸ்)




காணி விற்பனைக்கு
நெல்லியடி லேன், கொக்குவில் கிழக்கு ஒழுங்கை முகப்புடன் சாயி துர்க்கா ஆலயத்தில் இருந்து 40 M தூரத்தில் 5 பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு. .
● 3 துண்டுகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
● வருவதற்கு 3 பாதைகள் உண்டு.
தொடர்புகளுக்கு (8187)
077 780 2492


31 ஆம் நாள் நினைவஞ்சலி

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணுலகில் 04 - 08 - 1953

விண்ணுலகில் 04 - 07 - 2026



### அமரர் ஆறுமுகம் ஏகானந்தசிவம் (சிவம்)

(மண்டைதீவு - நல்லூர்)

(ஓய்வு நிலை முகாமைத்துவ உத்தியோகத்தர் - யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் யாழ் மாநகர சபை)

திதி: அபரபட்ச பஞ்சமி

"படைத்தவை மீளப் பெறும் இறைவன், நினைவுகளை என்றும் அழிப்பதில்லை

விதி வலியது எனத் தெரியும்...
இவ்வளவு கொடூரமானதென
கனவிலும் நினைக்கவில்லை...

வாழ்க்கை இனி நகரும்...
நாட்கள் மாதங்களாகும்...
மாதங்கள் ஆண்டுகளாகும்...

ஆனால்...
உங்கள் வெற்றிடம் மட்டும்
என்றும் நிலைத்திருக்கும்...

கடந்த 04.07.2026 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தின் தலைவரான அமரர் ஆறுமுகம் ஏகானந்தசிவம் அவர்களின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று 03.08.2026 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதிய போசன நிகழ்வும் முற்பகல் 11.00 மணியளவில், கோயில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு, அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்து, இந்நிகழ்வைச் சிறப்பிக்குமாறு தங்களைப் பணிவன்புடன் அழைக்கிறோம்.

மேலும் எங்கள் குடும்பத்தின் தலைவரின் திடீர் மறைவால் ஏற்பட்ட ஆழ்ந்த துயரத்தில் எங்களுடன் இணைந்து ஆறுதலும் ஆதரவும் வழங்கி, பல்வேறு வழிகளில் உறுதுணையாக நின்ற அனைத்து உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் நல்லுள்ளங்களின் அன்பு, பிரார்த்தனைகள், அரவணைப்பு மற்றும் ஆதரவிற்கு எங்கள் குடும்பத்தின் சார்பில் இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தயவு செய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு, தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

340, கோயில் வீதி,
நல்லூர். (C-6158)

தகவல் : குடும்பத்தினர்
077 557 3860, 021 222 1458


மணப்பெண் தேவை

1. கரவெட்டி, இந்து, கௌரவகுலம், 1991, பூராடம், Electrical and Elecronic Engineering (UK University), Electrical Engineer, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (53946)
2. கோண்டாவில், இந்து, கௌரவகுலம், 1993, உத்தரம், BSC in Civil Engineering, Civil Engineer, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (58653)
3. பருத்தித்துறை, இந்து, கௌரவ குலம், 1999, மிருகசீரிடம் , ACCA Own Business UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (58731)
4. காரைநகர், இந்து, கௌரவகுலம், 1992, சுவாதி Bachelor of Health Science (Deaking University), Counsellor Social Support worker, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (49974)
5. புங்குடுதீவு, இந்து, கௌரவகுலம், 1995, பரணி, BSc (Ryesaon University) HR In It, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (49598)
6. சாவகச்சேரி, இந்து, 1996, மிருகசீரிடம், Bachelor of Engineering (Hons) with Computer Systems Engineering, Bachelor of Science, Software Engineer, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (32933)
7. தெல்லிப்பழை, இந்து, 1996, சித்திரை, Master bussines Mangement (First Class Hons) Bachelor of Accounting Commercial Law, Principal Advisor For NewZealand Government, New Zealand Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (36133)
8. சுழிபுரம் இந்து, கௌரவகுலம், 1993, பூரட்டாதி, Bsc (Hons) inquantity Surveying and MRICS, Charted Quanity Surveyor, United Arab Emirates மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (38211)
9. இணுவில், இந்து, கௌரவகுலம், 1993, பூரட்டாதி, Phd Engineering, Software Developer, Germany Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54607)
10. நல்லூர், இந்து, கௌரவகுலம், 1987, புனர்பூசம், Nursing Bsc Health and Science, UK Bachelor Bsc (Hons) UK, (Lap Work) Switzerland Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (45796)

எம்மிடம் எல்லா நாட்டிலும் Unmarried, Devorce மணப்பெண்களும், மாப்பிள்ளைகளும் உண்டு. (C-6154)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 992 1494



வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
# 01 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி. யாழ்ப்பாணம்.
021 222 6113, 076 443 1576

அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
# 10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536, 077 657 9349 (C-6152)

○ அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன். ○ 25 வருடங்களாக மக்கள் நம்பிக்கையை வென்ற நிறுவனம்.
○ அனுப்பப்படும் பொதிகளுக்கு காப்புறுதி செய்ய வேண்டியதில்லை. முழுப் பெறுமதியையும் எமது நிறுவனம் பொறுப்பேற்கும்.
கிளைகள் ○ உங்கள் வீடுகளுக்கு வந்து ஏற்றுக் கொள்ளப்படும் சேவைக்கு மேலதிக கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.
# 01 தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. # 01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. CTB பஸ் டிப்போ எதிரில் பருத்தித்துறை. கொமர்ஷல் வங்கி அருகில் கிளிநொச்சி.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media